




PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 222 25.03.2026 புதன்கிழமை

Chennai Volume: 01 Issue: 222 Wednesday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

புதன்கிழமை
(25-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-11
பிறை: வளர்பிறை
திதி
சப்தமி மாலை 5.10 வரை
பிறகு அஷ்டமி.
நட்சத்திரம்:
மிருகசீர்ஷம் இரவு 8.34
வரை பிறகு திருவாதிரை
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 12.00-1.30 மணி
எமகண்டம்
காலை 7.30-9.00 மணி.
சூலம் - வடக்கு.
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 4-5 மணி.

மேஷம் ....................அன்பு
ரிஷபம்......................தனம்
மிதுனம் ............... மாற்றம்
கடகம் ....................வெற்றி
சிம்மம் ..................கவனம்
கன்னி .................... ஜெயம்
துலாம் ................. ஊக்கம்
விருச்சிகம்........... அமைதி
தனுசு ...................... ஓய்வு
மகரம் ...................... பரிசு
கும்பம்....................பணிவு
மீனம் ......................நேசம்

# போர் நிறுத்தமும் பேச்சுவார்த்தையும்: அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவிப்புக்கு ஈரான் மறுப்பு



**வாஷிங்டன், மார்ச் 25:**

ஈரான் மீது 5 நாட்கள் தாக்குதல் நடத்த மாட்டோம். கடந்த இரு நாட்களாக ஈரானுடன் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஆனால், பேச்சுவார்த்தை எதுவும் நடைபெறவில்லை என்று ஈரான் மறுப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் ராணுவத்துக்கு இடையே கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல் போர் நடைபெற்று வருகிறது.

இந்த போரின் எதிர்விளைவாக ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் கச்சா எண்ணெய் போக்குவரத்தை ஈரான் ராணுவம் முடக்கி உள்ளது. இதனால் உலகம் முழுவதும் கச்சா எண்ணெய், எரிவாயுவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் திறக்க வேண்டுமென ட்ரம்ப் விடுத்த எச்சரிக்கைக்கு பதிலடியாக வளைகுடா நாடுகளின் கடல்நீர் சுத்திகரிப்பு நிலையங்களை தகர்ப்போம் என்று ஈரான் தரப்பில் எச்சரிக்கை விடுத்தனர். வளைகுடா நாடுகளின் குடிநீர் தேவையில் 90% கடல்நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலமாக மட்டுமே பூர்த்தி செய்யப்படுகிறது. அவற்றை ஏவுகணைகள் மூலம் தகர்ப்போம் என்று ஈரான் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தது.

இந்த சூழலில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: கடந்த இரு நாட்களாக அமெரிக்கா, ஈரான் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இந்த பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்திருக்கிறது.

மத்திய கிழக்கின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண்பது குறித்து தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். ஒரு வாரம் வரை பேச்சுவார்த்தை நீடிக்கக்கூடும். எனவே ஈரானின் மின் நிலையங்கள், எரிசக்தி நிலையங்கள் மீது 5 நாட்கள் தாக்குதல் நடத்தப்படாது. இதுதொடர்பாக அமெரிக்க படைகளுக்கு உத்தரவு பிறப்பித்து உள்ளேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஈரானுடன் பேச்சுவார்த்தை அதிபர் ட்ரம்ப் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: ஈரான் பிரதிநிதிகளை நான் தொடர்பு கொள்ளவில்லை. அவர்களே பேச்சுவார்த்தைக்கு முன்வந்தனர். பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண அவர்கள் விரும்புகின்றனர். நாங்களும் சுமுக தீர்வை எட்ட விரும்புகிறோம்.

ஈரானை சேர்ந்த சிலருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். அவர்கள் மரியாதைமிக்க தலைவர்கள். ஈரான் உச்ச தலைவர் மொஜ்தபா காமேனி உயிரோடு இருக்கிறாரா, இல்லையா என்பது தெரியவில்லை.

ஹார்முஸ் ஜலசந்தியை நானும், காமேனிக்கு அடுத்த தலைவரும் இணைந்து நிர்வகிக்கலாம். ஈரானுடனான பேச்சுவார்த்தை சரியான பாதையில் சென்றால் ஒரு வாரத்துக்குள் போர் முடிவுக்கு வரும். இல்லையெனில் ஈரான் மீது மீண்டும் குண்டுமழை பொழிவோம். இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்தார்.

**ஈரான் அரசு மறுப்பு**

இதனிடையே ஈரான் வெளியுறவுத் துறை நேற்று வெளியிட்ட அறிக்கையில், "அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே எந்த பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை. ஈரான் விடுத்த கடும் எச்சரிக்கையை அடுத்து போரலிருந்து ட்ரம்ப் பின்வாங்குகிறார். கச்சா எண்ணெய் விலையைக் குறைக்கவே அதிபர் ட்ரம்ப் இதுபோன்ற அறிவிப்பை வெளியிட்டு உள்ளார்.

மத்திய கிழக்கில் பதற்றத்தை தணிக்க இந்த பிராந்திய நாடுகள் முயற்சி மேற்கொண்டு உள்ளன. ஆனால் அந்த நாடுகள் அமெரிக்காவுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். நாங்கள் போரை தொடங்கவில்லை. அமெரிக்காவே எங்கள் மீது போர் தொடுத்தது" என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஈரான் தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் இப்ராகிம் ரெசாய் கூறும்போது, "அதிபர் ட்ரம்ப் மீண்டும் ஒருமுறை தோற்கடிக்கப்பட்டு உள்ளார்.

அமெரிக்காவுடன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ எவ்வித பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை" என்றார்.

# பெட்ரோல், சமையல் காஸ், உரம் தடையின்றி விநியோகம்: மக்களவையில் பிரதமர் மோடி வாக்குறுதி



**புதுடெல்லி, மார்ச் 25:**

நாடு முழுவதும் பெட்ரோல், சமையல் காஸ் தடையின்றி விநியோகம் செய்யப்படும். விவசாயிகளுக்கு தடையின்றி உரங்கள் வழங்கப்படும் என்று மக்களவையில் பிரதமர் நரேந்திர மோடி வாக்குறுதி அளித்து உள்ளார்.

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் போர் குறித்து பிரதமர் நரேந்திர மோடி மக்களவையில் நேற்று விளக்கம் அளித்தார். அவர் கூறியதாவது: மேற்கு ஆசியாவின் தற்போதைய நிலைமை மிகுந்த கவலையளிக்கிறது. 3 வாரங்களுக்கும் மேலாக பிரச்சினை நீடிக்கிறது. இதனால் சர்வதேச பொருளாதாரம் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. தற்போதைய போரால் நமது நாட்டில் பல்வேறு சவால்கள் எழுந்துள்ளன.

போரின் எதிர்விளைவாக உலகின் மிக முக்கிய கடல் வழி போக்குவரத்து (ஹார்முஸ் ஜலசந்தி) முடங்கியிருக்கிறது. இதனால் கச்சா எண்ணெய், எரிவாயு போக்குவரத்து மோசமாகப் பாதிக்கப்பட்டு உள்ளது. வளைகுடா நாடுகளில் சுமார் ஒரு கோடி இந்தியர்கள் வசிக்கின்றனர். அவர்களின் பாதுகாப்பில் மத்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. பல்வேறு நாடுகளின் சரக்கு கப்பல்களில் இந்தியர்கள் பெரும்பான்மையாக பணியாற்றி வருகின்றனர்.

அவர்களை பாதுகாக்க பல நாடுகளின் தலைவர்களிடம் வலியுறுத்தியிருக்கிறேன். போரால் பாதிக்கப்பட்ட இந்தியர்களுக்கு உதவ 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை, அவசர உதவி எண்கள் அறிவிக்கப்பட்டு உள்ளன. ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்தியாவுக்கு கச்சா எண்ணெய், எரிவாயு, உரங்கள் கொண்டு வரும் சரக்கு கப்பல் போக்குவரத்து முடங்கியிருக்கிறது.

இப்போதைய இக்கட்டான காலத்திலும் பெட்ரோல், டீசல், காஸ் விநியோகம் சீராக நடைபெற்று வருகிறது. இந்தியாவின் சமையல் காஸ் தேவையில் 60 சதவீதம் வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. உள்நாட்டில் சமையல் காஸ் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு உள்ளது. நாடு முழுவதும் பெட்ரோல், டீசல், சமையல் காஸ், உரம் தட்டுப்பாடு இன்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

**41 நாடுகளில் இருந்து...**

கச்சா எண்ணெய், எல்என்ஜி, எல்பிஜி ஆகியவை முன்பு 27 நாடுகளில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது 41 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. நமது நாட்டில் 53 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் இருப்பு உள்ளது. இதனை 65 மெட்ரிக் டன்னாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பெட்ரோலில் 20% எத்தனால்...**

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு பெட்ரோலில் 1.5 சதவீத எத்தனால் கலக்கப்பட்டது. தற்போது 20 சதவீத எத்தனால் கலக்கப்படுகிறது. இதன்மூலம் 4.5 கோடி பேரல்கள் கச்சா எண்ணெய் இறக்குமதி குறைந்திருக்கிறது. நாடு முழுவதும் பெரும்பாலான ரயில் வழித்தடங்கள் மின்சாரமயமாக்கப்பட்டு உள்ளன. இதன் காரணமாக 180 கோடி லிட்டர் டீசல் மிச்சப்படுத்தப்பட்டு உள்ளது. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

# உரிமை கோரப்படாத ரூ.5,200 கோடி நிதி! சந்தாதாரர்களுக்குத் தானாக செலுத்தப்படும்: இபிஎஃப்ஓ அறிவிப்பு




**புதுடெல்லி, மார்ச் 25:**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் (இபிஎஃப்ஓ) உரிமை கோரப்படாமல் முடங்கிக் கிடக்கும் சுமார் ரூ.5,200 கோடி நிதியை, சம்பந்தப்பட்ட சந்தாதாரர்களின் வங்கி கணக்குகளுக்குத் தானாக செலுத்தும் புதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக எவ்வித பரிவர்த்தனையும் இன்றி செயலற்று இருக்கும் கணக்குகளைக் கண்டறிந்து, அவற்றுக்கான தொகையை எவ்வித விண்ணப்பமும் இன்றி தானாகவே திருப்பிச் செலுத்தப்படும். இதன்மூலம், லட்சக்கணக்கான தொழிலாளர்கள் அலைச்சலின்றி தங்களின் பணத்தைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கடந்த பிப்ரவரி மாத நிலவரப்படி, இபிஎஃப்ஓ-வில் சுமார் 31.8 லட்சம் கணக்குகள் செயலற்ற நிலையில் உள்ளன. அதாவது, 55 வயது கடந்த சந்தாதாரர்கள் பணி ஓய்வு பெற்று, தொடர்ந்து 3 ஆண்டுகள் எவ்வித பங்களிப்பும் செலுத்தவில்லை எனில், அவர்களின் கணக்குகள் 'செயலற்ற' கணக்குகளாக கருதப்படும். இதில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக முடங்கிக் கிடக்கும் 7 லட்சம் கணக்குகளும் அடங்கும்.

இந்த நிதியை மீட்பதற்காக, தொழில்நுட்ப உதவியுடன் ஆதார் சரிபார்க்கப்பட்ட கணக்குகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட சுமார் 8.10 லட்சம் செயலற்ற கணக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதில் 14,000 கணக்குகளில் தலா ரூ.5 லட்சம் மேல் இருப்பு உள்ளது குறிப்பிடத்தக்கது.

மத்திய அறங்காவலர் வாரியத்தின் (சிபிடி) சமீபத்திய கூட்டத்தில், முதல்கட்டமாக ரூ.1,000-க்கும் குறைவான இருப்பு கொண்ட கணக்குகளுக்கு நிதியைத் திருப்பிச் செலுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## மக்களவை இடங்களை அதிகரிக்க மத்திய அரசு திட்டம்



**புதுடெல்லி, மார்ச் 25:**

பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டை உறுதி செய்யும் 'நாரி சக்தி வந்தன் அதினியம்' (மகளிர் இட ஒதுக்கீடு சட்டம்) அமலாக்கத்தில் நிலவும் சிக்கல்களைத் தீர்க்க மத்திய அரசு இந்த புதிய முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளதாக தெரிகிறது.

இதன்படி, அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தொகுதி மறுவரையறை வரை காத்திருக்காமல், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே மக்களவை இடங்களை அதிகரிக்க மத்திய அரசு ஆலோசித்து வருகிறது. இதற்காக எதிர்க்கட்சிகளுடன் ஒருமித்த கருத்தை எட்ட அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

தற்போதைய சூழலில், தொகுதி மறுவரையறை நடைமுறையில் இருந்து மகளிர் இட ஒதுக்கீட்டைத் தனியாகப் பிரித்து, முதற்கட்டமாக இடங்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்தத் திட்டத்தின்படி, தற்போதைய மக்களவை இடங்களின் எண்ணிக்கை 816-ஆக உயரும். இதில் 33 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ் பெண்களுக்கு 273 இடங்கள் ஒதுக்கப்படும்.

# எங்களைக் காக்கப் பிரதமர் தயாராக இருக்கிறாரா?

**சென்னை, மார்ச் 25:**

எங்களைக் காக்கப் பிரதமர் தயாராக இருக்கிறாரா? என்று நாட்டு மக்கள் கேள்வி எழுப்புவதாக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் தன்னுடைய எக்ஸ் தளப் பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது:

தயார்நிலையை மக்களிடம் ஒப்படைக்க முடியாது. எதற்குத் தயாராக வேண்டும், தலைமைக்கா, அல்லது அதன் இல்லாமைக்கா?

பிரதமர் அவர்களே... தயாராக இருக்க வேண்டியது மத்திய அரசா? நாட்டு மக்களா?

கரோனாவுக்குத் தயாரானதுபோல் மேற்காசிய போர் பாதிப்புகளுக்கும் தயாராக இருக்க வேண்டும் என்கிறார் பிரதமர்.

போர்ச்சூழல் தீவிரமடைந்த உடனே, அதன் தாக்கங்களை உணர்ந்து, அனைத்துப் பயன்பாடுகளுக்குமான சிலிண்டர்கள் தடையின்றிக் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

வளைகுடா நாடுகளில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க வேண்டும்.

மின் நிலையங்களுக்கான எரிவாயு விநியோக அளவுக் கட்டுப்பாடுகளை மாற்றி அமைக்க வேண்டும் எனத் தங்களுக்குக் கடிதம் எழுதினேன்.

நிலைமையின் தீவிரத்தை மத்திய ஆட்சியாளர்களுக்கு உணர்த்த எதிர்க்கட்சிகள் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டம் நடத்தினர்.

தங்களது நடவடிக்கைகளுக்குக் காத்திராமல், பொறுப்புள்ள மாநில அரசாக உயர்நிலை ஆலோசனை மேற்கொண்டு, உணவு உற்பத்தித் தொழிற்கூடங்கள் எல்பிஜி-க்குப் பதிலாக மின் அடுப்புகளைப் பயன்படுத்தும்போது ஏற்படும் கூடுதல் மின்சார நுகர்விற்கு, யூனிட் ஒன்றுக்கு ரூ.2 மானியம்!

எம்எஸ்எம்இ நிறுவனங்கள் மின் அடுப்புகள், மின் சூடேற்றிகள் கொள்முதல் செய்வதற்கு மானியத்துடன் கூடிய கடன்!

தொழிற்சாலைகள் மாற்று எரிபொருட்களைப் பயன்படுத்திக்கொள்ள தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் இசைவாணை பெறத் தேவையில்லை.



உணவகங்கள் மூடப்படும் வேளையில், விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு, காய்கறிகள் மற்றும் பழங்களை 194 உழவர் சந்தைகளில் எவ்விதக் கட்டுப்பாடு இல்லாமல் அவர்கள் விற்பனை செய்துகொள்ள அனுமதி.

உள்ளிட்ட அறிவிப்புகளை எரிவாயு தட்டுப்பாட்டை எதிர்கொள்ள அறிவித்தோம்.

அப்போதே கேட்டேன்: மக்கள் நலனைக் காக்க மத்திய அரசு என்ன செய்யப் போகிறது? அப்போதும் பதில் இல்லை.

தொலைநோக்கும் முன்னெச்சரிக்கையும் இன்றிச் செயல்படும் மத்திய பா.ஜ.க. அரசைக் கண்டித்துத் தமிழ்நாடெங்கும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

இத்தனைக்கும் பிறகு, "மக்கள் தயாராக இருக்க வேண்டும்" என்று மக்களுக்கே அறிவுரை வழங்குகிறீர்கள்.

மக்களைத் தயாராக இருக்கச் சொல்லும் முன், அவர்களைக் காக்க நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?


மேற்காசியப் போரின் தாக்கங்களில் இருந்து இந்திய மக்களைப் பாதுகாக்க, நீங்கள் எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?

இப்போது நாட்டின் கேள்வி ஒன்றுதான்: "எங்களைக் காக்கப் பிரதமர் தயாராக இருக்கிறாரா?" என்று அவரின் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.




# கட்டிக்குளம் மகா சித்தர் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி மடத்தில் தண்டாயுதபாணி சுவாமி வீதியுலா





**மானாமதுரை மார்ச் 25:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கட்டிக் குளம் கருப்பனேந்தல் மடத்தில் மகா சித்தர் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமி முதல் ஜீவ ஒடுக்கம் உள்ளது. இங்கு மாதந்தோறும் சுவாமி அவதார நட்சத்திரம் பூராடம் மற்றும் அமாவாசை பௌர்ணமி சிறப்பு பூஜைகள் நடைபெறும். சுவாமி பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்த தண்டாயுதபாணி சுவாமி மாதந்தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரம் தினத்தில் சிறப்பு பூஜை வழிபாடுநடைபெறும். பங்குனி மாதம் கார்த்திகை நட்சத்திரம் தினத்தில் மயில் வாகனத்தில் அலங்காரம் செய்யப்பட்டு கட்டி குளத்தில் வீதிஉலா நிகழ்ச்சி நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் தண்டாயுதபாணி சுவாமி வணங்கி வரவேற்று வழிபாடு செய்தனர். மகா சித்தர் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமி மடத்தில் பக்தர்கள் அனைவருக்கும் தினந்தோறும் அன்னதானம் நடைபெற்று வருகிறது.

# இளையான்குடி பள்ளியில் உலக தண்ணீர் தினம்



**சிவகங்கை மார்ச் 25:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் நல்வழி ஸ்கூல் உயர்நிலைப்பள்ளி சமூக ஆர்வலர் அப்துல் மாலிக் ஏற்பாட்டில் பள்ளி தலைமை ஆசிரியர் சத்யா தலைமையில் பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் தங்கதுரை முன்னிலையில் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு மாணவ மாணவிகளுக்கு தண்ணீர் அவசியத்தை பற்றி எடுத்துரைத்து சிறப்புரை ஆற்றப்பட்டது மிகச் சிறப்பாக சிறப்புரை நீர் நிலையங்களை பாதுகாப்போம் நீரை சேமிப்போம் நீரின்றி அமையாது உலகு அனைத்து உயிரினங்களும் உயிர் வாழ நீர் அவசியம் ஆற்றிய இளையான்குடி சமூக ஆர்வலர் அப்துல் மாலிக் அவர்களுக்கு பள்ளியின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது

# மக்கள் ஐயாவை கைவிட மாட்டார்கள்... நான் ராமதாசின் பிள்ளை - சீமான் புகழாரம்



**வேலூர், மார்ச் 25:** வேலூரில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சோனியாவை ஆதரித்து அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர் கூறியதாவது:

* கனிமொழிக்கே சீட் கொடுக்காதவர்கள் கம்யூனிஸ்ட்டுகளுக்கு எப்படி கொடுப்பார்கள்..?

* ஒரு சீட்டுக்காக சரண் அடையாமல் மக்களை எச்சரிக்கும் வேல்முருகனை பாராட்டலாம்.

* கட்சிகளால் கைவிடப் பட்டதாக சொல்லாதீர்கள். எங்கள் ஐயாவை மக்கள் கைவிடுவார்கள் என்று நினைக்கிறீர்களா? மக்கள் அவரை கைவிட மாட்டார்கள்.

*நான் ராமதாஸின் பிள்ளை.. நான் இன்று பேசுவது அவர் கற்றுக்கொடுத்ததுதான்.

*நான் ராமதாசின் பிள்ளை. நான் இன்று பேசுவது அவர் கற்றுக்கொடுத்ததுதான். அவர் இல்லாமலா எனக்கு இந்த எனக்கு உணர்வு வந்துள்ளது. இந்த போராட்ட குணம் வந்துள்ளது.

*85 வயதில் தமிழைத்தேடி என்று ஒருவன் நடப்பானா? ஒரு தலைவன் இருக்கிறானா?

* சமூக நீதி என்று பேசுபவர்கள் அவரைத்தாண்டி பேச ஆள் இருக்கிறதா?

* நாட்டில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இன்னும் பேசும் ஒருவர் என் ஐயா தான்.

* ஐயாவின் கனவை பிள்ளைகள் நாங்கள் நிறைவேற்றுவோம்.

*இந்த வயதிலும் நாட்டிற்கு ஏதாவது செய்வோம் என்று இயங்கிக்கொண்டு இருக்கிறாரே ஐயா ராமதாசை பாராட்டுங்கள்.

*மொத்த கட்சி கூட்டணியை ஒத்த கட்சி மோதி வெல்லும். மொத்தத்தில் வீரம் வேண்டும் சுடலை மாடா.

* பேரிடர் காலத்திற்கு தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்புல்லாணி பங்குனி பிரம்ம உத்ஸவம் 2026





திருப்புல்லாணி பங்குனி பிரம்ம உத்ஸவம் 2026 கருட துவஜாரோஹணம் கொடிமரம் பலிபீடம் திருமஞ்சனம்

# தமிழகம் முழுவதும் த.வெ.க.வுக்கு தாவ தயாராகும் காங்கிரஸ் அதிருப்தி நிர்வாகிகள்

**சென்னை, மார்ச் 25:** தேர்தல் காலங்களில் அதிரடி திருப்பங்கள், எதிர்பாராத நிகழ்வுகள் நடப்பது சகஜம். அந்த வகையில் புதுவை அரசியலில் எதிர்பாராத திருப்பமாக பா.ஜனதா எம்.எல்.ஏ., என்.ஆர். காங்கிரஸ் ஆதரவு சுயேச்சை எம்.எல்.ஏ. முன்னாள் பா.ஜனதா மாநில தலைவர், முன்னாள் அ.தி.மு.க. காங்கிரஸ் எம்.எல். ஏக்கள் தங்கள் கட்சிகளில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக த.வெ.க.வில் இணைந்து தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

அண்டை மாநிலமான புதுவையில் நடந்த அதிரடி திருப்பங்கள் போல் தமிழ்நாட்டில் நடைபெறுவதற்கான சூழல் உருவாகி வருவதாக கூறப்படுகிறது.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் நீண்டகாலமாக தி.மு.க. கூட்டணியில் இருக்கிறது. ஆனால் தி.மு.க.வில் உரிய மரியாதை தருவதில்லை. ஆட்சி அதிகாரத்தில் பங்கு பெற வேண்டும். கூடுதல் தொகுதிகளையும் பெற வேண்டும் என்ற கோஷம் காங்கிரசுக்குள் வலுத்தது. அதற்கு முக்கிய காரணம் தேர்தல் களத்துக்கு புதிதாக வந்த த.வெ.க.தான்.

தி.மு.க. கூட்டணி ஒத்து வராத பட்சத்தில் த.வெ.க.வுடன் கூட்டணி அமைக்க வேண்டும் என்று காங்கிரசில் ஒரு கோஷ்டி தீவிரமாக காய் நகர்த்தியது.

ஒரு கட்டத்தில் பழம் நழுவி பாலில் விழும் கதையாக த.வெ.க.- காங்கிரஸ் கூட்டணி ஏற்படலாம் என்ற பரபரப்பு ஏற்பட்டது. ஆனால் கடைசி கட்டத்தில் தி.மு.க. கூட்டணியை விரும்பும் காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் தி.மு.க. மூத்த நிர்வாகிகள் இணைந்து அந்த திட்டத்தை முறியடித்து தி.மு.க. கூட்டணியிலேயே காங்கிரசை நீடிக்க வைத்தனர். கடந்த தேர்தலைவிட காங்கிரசுக்கு 3 தொகுதிகள் கூடுதலாக ஒதுக்கப்பட்டது.

இருப்பினும் காங்கிரசில் ஒரு பிரிவினர் அதிருப்தியிலேயே இருக்கிறார்கள். அவர்கள் காங்கிரசில் இருந்து விலகி த.வெ.க.வில் இணைய போவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதுதொடர்பாக காங்கிரஸ் மாநில நிர்வாகிகள், மாவட்ட தலைவர் பதவி கிடைக்காதவர்கள் உள்பட பல நிர்வாகிகள் த.வெ.க.வினரை தொடர்புகொண்டு பேசி வருகிறார்கள். அதில் சிலர் புதுவையில் வாய்ப்பு கொடுத்தது போல் தமிழ்நாட்டிலும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கேட்டுள்ளார்கள்.

ஆனால் எல்லோருக்கும் வாய்ப்பு வழங்க இயலாது என்று தெரிவித்துள்ளார்கள். சென்னையில் காங்கிரஸ் நிர்வாகி ஒருவர் வட சென்னையில் போட்டியிட வாய்ப்பு கேட்டுள்ளார். ஆனால் அவர் கேட்ட தொகுதிகள் மீனவர்கள் நிறைந்த பகுதி என்பதால் அந்த சமூகத்தை சேர்ந்தவர்களுக்கே வாய்ப்பு கொடுக்கப்போவதாக கூறியிருக்கிறார்கள்.

மேலும் தமிழகம் முழுவதும் பெரும்பாலான தொகுதிகளுக்கு வேட்பாளர்களை தேர்வு செய்துவிட்டனர். அந்த தொகுதிகளில் மெஜாரிட்டியாக வாழும் சமூகம், எதிரணியினருக்கு ஓரளவு ஈடுகொடுத்து தேர்தல் செலவுகளை சமாளிக்கும் தகுதி, விஜய்யுடன் பல ஆண்டுகளாக பயணிக்கும் சாதாரண தொண்டர்கள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து வேட்பாளர்களை தேர்வு செய்துள்ளார்கள்.

இதனால் காங்கிரசில் இருந்து வாய்ப்பு கேட்ட சிலருக்கு வாய்ப்பு வழங்க இயலாத நிலையை த.வெ.க. தரப்பில் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.

தற்போது காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் 17 பேர் இருக்கிறார்கள். அந்த 17 தொகுதிகளையும் காங்கிரசுக்கு ஒதுக்க முடிவு செய்துள்ளனர். அதே தொகுதிகள் கிடைத்தாலும் அனைத்து எம்.எல்.ஏ.க்களுக்கும் மீண்டும் வாய்ப்பு கொடுப்பது சந்தேகம்.

அவ்வாறு வாய்ப்பு கிடைக்காதவர்களும் த.வெ. க.வுக்கு செல்ல தயாராகி வருவதாக கூறப்ப டுகிறது. இந்த சூழ்நிலையில் கட்சியில் இருந்து விலகி செல்பவர் களை தடுக்க மூத்த நிர்வாகிகள் முயற்சி மேற்கொண்டு உள்ளார்கள்.

# 8 தொகுதிகளிலும் பானை சின்னத்தில் போட்டியா?

## திருமாவளவன் விளக்கம்



**சென்னை, மார்ச் 25:** மாநிலங்களவை சீட் குறித்து பேசினோம். பரிசீலிப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள் என்று திருமாவளவன் கூறினார்.

வரும் சட்டசபை தேர்தலில் 6 தனித்தொகுதிகளிலும் 2 பொதுத்தொகுதிகளிலும் விடுதலை சிறுத்தைகள் கட்சி போட்டியிடுகிறது.

தி.மு.க. கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு 8 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது குறித்து திருமாவளவன் விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* இரட்டை இலக்கத்தில் தொகுதிகளை கேட்டுப் பெறுவது என நேற்றைய விசிக உயர்நிலைக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* விசிகவிற்கு இரட்டை இலக்க தொகுதிகள் வேண்டும் என முதல்வரிடம் வலியுறுத்தப்பட்டது.

* 23 கட்சிகள் உள்ள மெகா கூட்டணி என்பதால் கூட்டணி கட்சிகளின் நலனை கருத்தில்கொண்டு 8 தொகுதிகளுக்கு விசிக உடன்பட்டது.

* விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நலன் எவ்வளவு முக்கியமோ கூட்டணி கட்சிகளின் நலமும் முக்கியம்.

* திமுக கூட்டணியில் தொடர்ந்து பயணிப்பதற்கு முதன்மையான காரணம் ஜனநாயக அரசியல் பாதுகாப்பு தான்.

* திராவிட அரசியலுக்கு களமாடுகிறோம் என்ற பெயரில் சமூக நீதி அரசியலுக்கே வேட்டு வைக்க சிலர் முயற்சிக்கிறார்கள்.

* மதவாத சக்திகள் தமிழ்நாட்டில் காலூன்றுவது மக்களுக்கு நல்லதல்ல, அதற்காக எதிர்த்து போராடுகிறோம்.

* இடதுசாரி அரசியலை பாதுகாப்பதற்காக எங்களுக்கும் கம்யூனிஸ்ட்களுக்கும் 18 தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

* 200-க்கும் மேற்பட்ட இடங்களில் திமுக கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் பணிபுரிவோம்.

* பிற்போக்கு அரசியல் தமிழ்நாட்டிற்கு வந்துவிடக் கூடாது.

*மாநிலங்களவை சீட் குறித்து பேசினோம். பரிசீலிப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள்.

*8 தொகுதிகளிலும் பானை சின்னத்தில் போட்டியிடுகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# TASMAC கடைகளில் மது விற்க கட்டுப்பாடு

## 6 மதுபாட்டில்தான் வாங்க முடியும்



**சென்னை, மார்ச் 25:** தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் வரை, டாஸ்மாக்கில் ஒரு நபருக்கு 4.5 லிட்டர் வரை மதுபான விற்பனைக்கும், 7.8 லிட்டர் பீர் விற்பனைக்கும், அதிகபட்சமாக 9 லிட்டர் ஒயின் விற்பனைக்கும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப் பட்ட வெளிநாட்டு மதுபானம் அல்லது இறக்குமதி செய்யப் பட்ட மதுபானத்தை 6 முழு பாட்டில்கள் (750 மிலி) வரையோ, அல்லது 12 அரை பாட்டில்கள் (375மிலி) அல்லது 24 கால் பாட்டில்கள் (180மிலி) வரையோ வாங்கலாம். அதேபோல், ஒரு நபருக்கு 12 பீர் பாட்டில்கள் (650மிலி) மட்டுமே விற்கப்படும்.

நிர்வாகத்தின் அறிவுறுத்தல் களின்படி, வரம்பைக் கடைப்பிடிக்குமாறு அனைத்து மேற்பார்வையாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் மாவட்ட மேலாளர்கள் சுற்றறிக்கைகளை வெளியிட்டுள் ளனர். விற்பனையானது ஒரு முழுமையான கணினி மயமாக்கப்பட்ட அமைப்பு மூலம் கண்காணிக்கப்படுகிறது.

மேலும், ஒரே ரசீதில் அனுமதிக்கப்பட்ட அளவை மீறிய கட்டணங்கள் இருந்தால், அதுகுறித்துக் கண்டறியப்பட்டு, விசாரணை மற்றும் துறைசார் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

மொத்த விற்பனைக்குத் தெளிவான வரையறை இல்லை என்று மேற்பார்வையாளர்கள் கூறியதைத் தொடர்ந்து இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

கடந்த ஆண்டுகளில், சில்லறை விற்பனைக் கடைகளில் அதற்கான இருப்பில் 50சதவீதத்துக்கும் அதிகமாக மதுபானங்களை இருப்பு வைப்பதற்கும், தனிநபர்களுக்கு மொத்தமாக விற்பனை செய்வதற்கும், சட்ட விரோதமாகவும் மற்றும் கடை செயல்படும் நேரத்திற்குப் பிறகும் மதுபானங்களைச் சேமித்து வைப்பதற்கும் மற்றும் விற்பனை செய்வதற்கும் எதிராக டாஸ்மாக் எச்சரித்துள்ளது.

# திமுகவின் நிழலில் சமூக விரோதிகள்- அண்ணாமலை



**சென்னை, மார்ச் 25:** தமிழகத்தில், கடந்த ஐந்து ஆண்டுகளில், பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்கள், குறிப்பாக, சிறு குழந்தைகள் மீது பாலியல் குற்றங்கள் செய்பவர்கள், பெரும்பாலும் திமுகவைச் சேர்ந்தவர்களாகவே இருப்பது, திமுக அரசு, தங்கள் மீது நடவடிக்கை எடுக்காது என்ற ஒரே தைரியத்தில்தான்.

ஒட்டு மொத்த சமூக விரோதிகளும், பாலியல் குற்றவாளிகளும், திமுகவின் நிழலில் இருப்பதால், சட்டத்தின் மீதோ, காவல்துறையின் மீதோ, சமூகத்தின் மீதோ, எந்த விதமான பயமோ, பொறுப்போ அவர்களுக்கு இருப்பதில்லை. இதனால் பாதிக்கப்படுவது, சாதாரண பொதுமக்களும், பெண்களும், குழந்தைகளும்தான்.

# பணி செய்ய விடாமல் இடர்பாடு- விழுப்புரம் நகர அ.தி.மு.க. செயலாளர் திடீர் விலகல்: எடப்பாடி பழனிசாமிக்கு கடிதம்



**விழுப்புரம், மார்ச் 25:** விழுப்புரம் தெற்கு நகர அ.தி. மு.க. செயலாளராக பசுபதி இருந்து வந்தார். திடீரென அவர் அப்பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அ.தி. மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு அனுப்பி உள்ள கடிதத்தில் கூறி இருப்பதாவது:-

நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தில் பல ஆண்டுகளாக அ.தி.மு.க. சார்பாக நடைபெற்ற சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற நான் கடுமையாக உழைத்துள்ளேன்.

தற்பொழுது விழுப்புரம் தெற்கு நகர செயலாளராக பணியாற்றி வருகிறேன். விழுப்புரம் மாவட்ட அ.தி. மு.க. முக்கிய நிர்வாகிகள் என்னை விழுப்புரம் தெற்கு நகர அ.தி.மு.க.வில் பணி செய்ய விடாமல் பல்வேறு இடர்பாடுகளும் இன்னல்களும் செய்து வருகிறார்கள். இதனால் நான் பல ஆண்டுகளாக வகித்து வந்த விழுப்புரம் தெற்கு நகர செயலாளர் பொறுப்பிலிருந்தும், அ.தி.மு.க. அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் விலகிக்கொள்கிறேன்.

நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் உண்மை விசுவாசியாக இருந்து பணியாற்றி கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

# நட்புக்காக இப்படியா செய்வாங்க! - சூடான டீயை கையில் ஊற்றி வீடியோ எடுத்த +2 மாணவிகள்



தேர்வு அறையை விட்டு வெளியே வரும் மாணவ, மாணவிகள் கத்தி கூச்சலிட்டு, ஒருவர் மீது ஒருவர் பேனா மையை பூசியும், வண்ண பொடிகளை தூவியும் தங்களது நட்பை வெளிப்படுத்துவது வழக்கம். தற்போது இந்த பழைய

**திருப்பத்தூர், மார்ச் 25:** தமிழகத்தில் பிளஸ்-2 மாணவ, மாணவிகளுக்கான அரசு பொதுத்தேர்வு மார்ச் 2-ந் தேதி தொடங்கி வரும் 26-ந் தேதியுடன் நிறைவு பெறுகிறது.இதில், ஒரு சில பாடப்பிரிவு மாணவர்களுக்கான பொதுத்தேர்வு நேற்றுடன் முடிவடைந்தது.பொதுத்தேர்வுகள் முடிவடைந்ததால் மாணவ, மாணவிகள் தங்களது நண்பர்கள் மற்றும் தோழிகளுடன் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

முன்பெல்லாம்தேர்வு முடிந்து கலாச்சாரம் கசந்துவிட்டதால் இன்ஸ்டாகிராம், முகநூல் போன்றவற்றில் வெளியிடப்படும் ஆபத்தான செயல்களை நாமும் செய்தால் என்ன என்ற மனநிலை உள்ள மாணவ, மாணவிகள் அதிகமாக உள்ளனர்.இந்நிலையில், வட இந்தியர்களின் கலாச்சாரமாக தற்போது டிரெண்டிங் ஆகி வரும் ஒரு ஆபத்தான செயலை திருப்பத்தூர் மாணவிகள் நேற்று பொதுவெளியில் செய்து அதை வீடியோவாக எடுத்து சமூக வளைதளங்களில் பதிவேற்றம் செய்தது தற்போது வைரல் ஆகி வருகிறது.

திருப்பத்தூர் மீனாட்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் பிளஸ்-2 தேர்வு முடிவடைந்து வெளியே வந்த மாணவிகள் சிலர் அருகே உள்ள ஒரு டீ கடைக்கு நேற்று மதியம் சென்று அங்கு சூடாக ஒரு டீ வாங்கி அதை மாணவிகள் 2 பேர் தங்களது கைகளை இறுக்கமாக பிடித்து கொதிக்கும் டீயை கைகள் மேல் ஊற்றி, எவ்வளவு சூடு இருந்தாலும் கைகளை பிரிக்கக்கூடாது, அது தான் உண்மையான நட்பு என்றும், 'துன்பத்திலும் நம் நட்பு எப்போதும் பிரியக்கூடாது'' எனக்கூறி அதை தங்களது செல்போனில் வீடியோவாக எடுத்து அதை சமூக வலைளங்களில் பதிவேற்றம் செய்தனர்.இந்த காட்சி வைரல் ஆனது. கொதிக்கும் டீயை மாணவிகளின் கைகளில் படும்போது அதன் வெப்பம் தாங்க முடியாமல் மாணவிகள் அலறிய காட்சி பார்ப்போரை அதிர்ச்சிக்குள்ளாகியது.

# வடசென்னை மாவட்ட முதலாவது சர்க்கிள் கூடுதல் பொறுப்பாளராக நியமித்த பின் காங்கிரஸ் பிரமுகர்களை சந்தித்து வாழ்த்து பெற்ற போது,

# M. மோகன் குமார்






























# கவிதை அரங்கம்!







உறங்கும் போது
கனவிலும்
விடிந்தவுடன்
நினைவிலும்
வாழும் வரை
உயிரிலும் நீயே..
(இப்படிக்கு உன்னவள்)

நீ
வானவில்லாய்
இரு நான்

அதில் இருக்கும்
ஏழு நிறமாய்
இருப்பேன்..!
என்றும்
இணைப்பிரியாமல்...

காற்றை கண்ட
உடன் நடனமாடும்
மரங்களை போல
அவனை கண்டதும்
என் மனமும்
நடனமாடுகிறது...

# வாழ்க்கை தத்துவம்...



பிடித்ததை எடுத்து
பிடிக்காததை விடுத்து
மகிழ்ச்சியாக இரு

நீங்கள் அனுபவித்தால்
அது உங்கள் அறிவு
பிறரையும் அனுபவிக்கச்
செய்தால் அது
உங்கள் நற்பண்பு


மகிழ்ச்சி எப்போதும்
உங்கள் கையில்
தான் உள்ளது

நீ செய்யும்
ஒவ்வொரு செயலும்
உன்னை பிற்காலத்தில்
யோசிக்க வைக்கும்

# மனித நேயம்!!!

அன்று நாராயணன் வழக்கம் போல் நடை பயிற்சிக்கு கிளம்பிவிட்டார். வணக்கம் .சார்.. வாக்கிங் கிளம்பிட்டீங்களா?.... இது மளிகை கடைக்காரர். வணக்கம் ரவி. ஆமாம், கிளம்பிட்டேன் என்று சொல்லிக் கொண்டே கடந்து சென்றார். இப்படி பல பேரை தினமும் பார்ப்பதில் அவருக்கு மகிழ்ச்சி. அதில் நிறைய நண்பர்கள் கிடைத்தார்கள். எல்லோரிடமும் ஒரு புன்னகை மற்றும் கையை அசைத்து விட்டு குறைந்தது ஒரு மணி நேரமாவது நடைப்பயிற்சி செய்வது அவருடைய வழக்கமான செயல். அவருக்கு மிகவும் பிடித்த விஷயமும் கூட. சில சமயத்தில் செல்போனில் பாடல்கள் ஏதாவது கேட்டுக் கொண்டே கூட நடந்து செல்வார். அன்று சாலை ஓரத்தில் வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, ஒரு வயதானவர் அவருக்கு 75 வயதிற்கு மேல் தான் இருக்கும்; தன் மனைவியுடன் இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். இவரை கடந்து சென்று, சற்று நேரத்தில் அவர் சாலையின் இடது பக்கம் வந்த தெருவில் செல்வதற்காக, வண்டியை இடது பக்கம் வளைத்து திருப்பினார். டமால்.... ஒரு சத்தம்; பேலன்ஸ் தவறி வண்டியிலிருந்து இருவரும் கீழே விழுந்தனர் .உடனே அருகில் வேகமாக சென்ற நாராயணன், அந்த வயதானவரை தூக்கிப்பிடித்து பக்கத்தில் இருந்த கடையின் படிக்கட்டில் உட்கார வைத்தார். அவரது மனைவியும், அம்மாடி, அப்பாடி என்று முனகிக்கொண்டே மெதுவாக எழுந்து நின்று, கை, கால்களை உதறினாள் .தன் புடவையை சரி செய்து கொண்டு தட்டி விட்டுக் கொண்டிருந்தாள். அவருக்கு ஏதாவது அடிபட்டு இருக்கா? என்று கேட்டாள் மாமி. அவருக்கு ஒன்றுமில்லை, ஒரு சிறிய சராய்ப்புதான். நல்ல வேலை வண்டியை மெதுவாக ஓட்டியதால் பலமாக அடிபடவில்லை. மாமி.. உங்களுக்கு ஏதாவது அடிபட்டதா? என்று கேட்டார் நாராயணன் பக்கத்தில் ஆஸ்பத்திரிக்கு இருக்கு. ஏதாவது போகணுமா? சொல்லுங்க என்றார். இல்ல மாமா ,அடி எதுவும் படல ஆனா நெஞ்சு படபடன்னு அடிச்சிக்குது, பயந்துட்டேன் .இப்படி மாமா பக்கத்திலே உக்காருங்கோ என்று சொல்லி விட்டு,அடுத்த பழக்கடைக்கு சென்று இரண்டு ஜூஸ் வாங்கிக்கொண்டு வந்து ,இருவரிடமும் குடிக்க கொடுத்தார். இருவரும் குடித்துவிட்டு 'ரொம்ப தேங்க்ஸ் மாமா' என்றார்கள் .உங்கள் பெயர் என்ன? எங்கிருந்து வரீங்க? என்று அவர்களுக்குள் பரஸ்பரம் பேசிக் கொண்டார்கள். என்னோடு சின்ன அட்வைஸ், வயசாயி டுத்து டூவீலரில் வருவது, அதுவும் மெயின் ரோட்டில் வருவது, கொஞ்சம் ரிஸ்க் ;அதனால் 'இனிமேல் இப்படி வர்றத அவாய்ட் பண்ணிடுங்கோ' என்றார் நாராயணன்.மாமி உடனே, நான் அப்பவே வேணாம்னு தான் மாமா சொன்னேன். இவர்தான் கேக்கல! பொண்ணாத்துக்கு போயிண்டு இருக்கோம் ,பேரனுக்கு இன்னிக்கி பர்த்டே அதுக்காகத்தான் போறோம் .இந்த தெரு கடைசியில் தான் வீடு என்றாள் மாமி .அதற்குள் பக்கத்தில் இருந்தவர்கள் எல்லோரும் வந்து வண்டியை எடுத்து சரி செய்து கொடுத்தார்கள். வண்டி ஸ்டார்ட் பண்ணியதும் ,ஸ்டார்ட் ஆயிடுச்சு .பார்த்து போங்கோ என்று சொல்லி வண்டியில் ஏற்றிவிட்டார். அவர்களுக்கு ஒரு பை.. பை சொல்லி விட்டு, போன் நம்பர் வாங்கிக் கொண்டார். இவருடைய விசிட்டிங் கார்டு ஒன்றையும் அவரிடம் கொடுத்தார். 'ஆத்துக்கு போன உடனே பத்திரமா வந்து சேர்ந்தேன் என்று எனக்கு ஒரு போன் பண்ணுங்க 'என்றார் நாராயணன். வண்டியும் கிளம்பி சென்றது .நாராயணன் காலி பாட்டில்களை எடுத்துக் கொண்டு பழக்கடைக்காரரிடம் கொடுத்துவிட்டு இரண்டு ஜூஸுக்கான காசையும் கொடுத்தார். அந்த பழக்கடைக்காரர் காசை வாங்கிக் கொண்டு இவருக்கு ஒரு பாட்டில் ஜூசை கொடுத்தார். சார் ..இது உங்களுக்கு .எனக்கா!!! என்று கேட்டார் நாராயணன். ஆமா, சார் நீங்களே வயதானவர், ஆனாலும் உங்களை விட வயசான ரெண்டு பேருக்கு நீங்க உதவி செய்தீங்க ,இதை பார்க்கும் போது உங்க மேல ரொம்ப மதிப்பும், மரியாதையும் வந்தது. அதனால உங்களுக்கு ஏதாவது கொடுக்கணும்னு நினைச்சேன். 'என்னால முடிஞ்சது ஒரு பாட்டில் ஜூஸ், வாங்கிக்கோங்க சார்' என்று மனதார பாராட்டினார். நாராயணன் அதைக் கேட்டு மிகவும் நெகிழ்ந்து போனார். ஜூசை குடித்துவிட்டு அவருக்கு நன்றி சொல்லிவிட்டு, மனிதநேயம் இன்னும் இருக்கிறது என்று நினைத்தார். மனதில் உயர்ந்த இடத்தினைபிடித்தார், அந்த பழக்கடைக்காரர். மனநிறைவுடனும், மகிழ்ச்சியுடனும் தன்னுடைய நடைப்பயிற்சியை தொடர்ந்தார்.

**எம்.எல்.பிரபா**
ஆதம்பாக்கம்



# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*தண்ணீயே இல்லாத கடல் எங்கே இருக்கு..?*
*விடை: வேறெங்க MAP -ல தான் இருக்கும்.*

*டன் கணக்கில் துணி துவைக்கும் இடம் எது.?*
*விடை: Washing(Ton) தான்.*

*தினேஷ் எப்போதும் Chair-லயே உட்கார்ந்துக்கிட்டே இருப்பானாம் ஏன்.?*
*விடை: ஏன்னா அவன் (Chair)man ஆம்.*



# தினம் ஒரு சமையல்



## சிறுபருப்பு & ஜவ்வரிசி பாயாசம்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| கப்பாசிபருப்பு | - 1 |
| ஜவ்வரிசி | - 1 கப் |
| வெல்லம் | - 2கப் |
| பால் | - 3 கப் |
| நெய் | - 4ஸ்பூன் |
| முந்திரி | - 6 |
| பாதாம் | - 6 |
| திராட்சை | - 6 |
| தண்ணீர் | - தேவைக்கு |
| ஏலக்காய்பொடி | - அரைஸ்பூன் |

செய்முறை:



முதலில்தேவையான பொருட்களை எடுத்து வைக்கவும்.பருப்பு, ஜவ்வரிசியை சுத்தம் பண்ணி அரைமணிநேரம் ஊற விடவும்.ஊற வைக்கும் போது நன்கு சாப்டாக வேகும்.

பாலைக்காய்ச்சவும்,குக்கரில் பருப்பு,ஜவ்வரிசியை 2கப் பால் ஊற்றி வேக வைக்கவும்.தண்ணீர்2 கப்சேர்த்துக்கொள்ளவும்.

நன்கு குழைய வேகவிடவும்.இப்போதுமீதி 1 டம்ளர் பாலைச் சேர்க்கவும். பின்வெல்லத்தை காய்ச்சிவடிகட்டி வைக்கவும்.

வேகவைத்த சிறுபருப்பு,ஜவ்வரிசி யுடன் வெல்லப்பால் சேர்க்கவும்.ஒரு வாணலியை அடுப்பில்வைத்து 4ஸ்பூன்நெய் ஊற்றவும்.

அதில் பாதாம், முந்திரி, திராட்சைசேர்த்து வறுக்கவும்.பொன் நிறமானதும் பாயாசத்தில் சேர்க்கவும்.

ஏலக்காய்பொடி சேர்க்கவும்.

நல்லவாசம்மிகுந்த சிறுபருப்பு,ஜவ்வரிசிபாயாசம் ரெடி..

# வெங்காயம் பயன்கள்



வெங்காயம் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தி, இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தி, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. வைட்டமின் சி மற்றும் குவெர்செடின் (QUERCETIN) நிறைந்த இது, அழற்சி எதிர்ப்பு மற்றும் ஆன்டி-மைக்ரோபியல் பண்புகள் மூலம் செரிமானம், எலும்பு ஆரோக்கியம் மற்றும் தோல் பொலிவுக்கு பெரிதும் உதவுகிறது. பச்சையாக சாப்பிடுவது சளி மற்றும் இருமலுக்கு சிறந்த மருந்தாகும். [1, 2, 3, 4, 5]

வெங்காயத்தின் முக்கிய ஆரோக்கிய பயன்கள்:

இதய ஆரோக்கியம்: இதய நோய்க்கான அபாயத்தைக் குறைத்து, கொழுப்பைக் கட்டுப்படுத்த உதவுகிறது

இரத்த சர்க்கரை மேலாண்மை: பச்சையான வெங்காயம் இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவைச் சீராக வைத்திருக்க உதவுகிறது

நோய் எதிர்ப்பு சக்தி: வைட்டமின் சி, நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துகிறது

செரிமானம்: குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, மலச்சிக்கலைத் தடுக்கிறது

சருமம் மற்றும் கூந்தல்: முகப்பரு வடுக்களைக் குறைத்து, சருமத்தைப் பொலிவாக்குகிறது; முடி வளர்ச்சியை ஊக்குவிக்கலாம்

சளி/இருமல் நிவாரணம்: சின்ன வெங்காயம், சளி, இருமல் மற்றும் ஆஸ்துமா போன்ற சுவாசப் பிரச்சனைகளுக்கு சிறந்த மருந்தாகும்

தினமும் உணவில் வெங்காயத்தைச் சேர்த்துக் கொள்வது ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கும் நன்மை பயக்கும்.




# அட்லீ - அல்லு அர்ஜுன் படத்தில் இணையும் நான்காவது நடிகை.. 8 ஆண்டுகளுக்கு பின் நடிக்க வருகிறார்?



அட்லீ இயக்கத்தில் அல்லு அர்ஜுன் நடிப்பில் பிரம்மாண்ட பொருட்செலவில் படம் உருவாகி வருகிறது. இப்படத்தில் அல்லு அர்ஜுனுடன் இணைந்து தீபிகா படுகோன் நடிக்கிறார். இதற்கான அறிவிப்பு வீடியோவை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டிருந்தனர்.

மேலும், நடிகைகள் ராஷ்மிகா மந்தனா மற்றும் மிருணாள் தாகூர் ஆகியோர் இப்படத்தில் நடிக்க கமிட்டாகியிருப்பதாக தகவல் வெளிவந்தது. ஆனால், படக்குழுவிடமிருந்து அறிவிப்பு வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், 8 வருடங்களாக சினிமாவில் நடிக்காமல் இருந்து வரும் பாலிவுட் நடிகை ஒருவர் அட்லீ - அல்லு அர்ஜுன் திரைப்படத்தில் இணைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவர் வேறு யாருமில்லை, நடிகை அனுஷ்கா ஷர்மாதான். இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலியின் மனைவியும், பாலிவுட் சினிமாவின் பிரபல நடிகையுமான அனுஷ்கா ஷர்மா கடந்த 2018ல் வெளிவந்த Zero படத்தில் கடைசியாக கதாநாயகியாக நடித்திருந்தார் நிலையில், அதன்பின் அவர் எந்த படத்திலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவில்லை. குறிப்பாக திருமணத்திற்கு பின் அவர் சினிமாவிலிருந்து விலகி இருக்கிறார்.

ஆனால், தற்போது 8 ஆண்டுகளுக்கு பின் இவர் அட்லீ - அல்லு அர்ஜுன் படத்தில் முக்கிய ரோலில் நடிக்கவிருப்பதாக கூறப்படுகிறது. ஆனால், இது அதிகாரப்பூர்வமான தகவல் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.



அஞ்சு தாராள கவர்ச்சி உடையில் வேற லெவல் ஹாட் போஸ் கொடுத்து ஸ்டில்களை வெளியிட்டுள்ளார். சில மணி நேரங்களில் அதற்கு 80 ஆயிரம் லைக்குகள் குவிந்திருக்கிறது.

# 'முட்ட கண்ண காட்டி என்னை பத்த வெச்சா'.. போராட்டம் படத்தின் 2ம் சிங்கிள்




*IBC தமிழ் ப்ரொடக்ஷன்ஸ் பாஸ்கரன் கந்தையா தயாரிப்பில் ராஜ் சிவராஜ் இயக்கத்தில் உருவாகி வரும் படம் போராட்டம்.*

*இந்த படத்தின் முதல் பாடல் ஏற்கனவே வெளியாகி நல்ல வரவேற்ப்பை பெற்று இருந்தது. தற்போது இரண்டாம் சிங்கிள் பாடல் வெளிவந்து இருக்கிறது.*

*பூவன் மதீசன் இசையமைப்பில் உருவாகி இருக்கும் இந்த பாடல் "முட்ட கண்ணை காட்டி என்னை பத்த வெச்சா.." என தொடங்குகிறது.*

*வரிகளை பொத்துவில் அஸ்மின் எழுதி இருக்கிறார். தயாஸ் மோகனதாஸ் மற்றும் அக்ஷலா நந்தகோபால் ஆகியோர் குரலில் சிறப்பாக இந்த ரொமான்டிக் பாடல் உருவாகி இருக்கிறது.*

# கோடீஸ்வர யோகம் தரும் ஏலக்காய் மாலை வழிபாடு!

இந்த உலகில் வாழ்வதற்கு அறிவு மட்டும் தேவையில்லை. கூடவே பொருளாதாரமும் இருந்தால் மட்டுமே வாழ்க்கை சிறக்கும். ஆன்மிக நம்பிக்கைகளில் செல்வத்துக்கு அதிபதியாக மகாலட்சுமி தேவி வணங்கப்படுகிறார். பொதுவாகவே, நறுமணம் கொண்ட பொருட்களில் மகாலட்சுமி தேவி வாசம் செய்வதாக நம்பப்படுவது உண்டு.



மகாலட்சுமியின் அம்சம் சில மணமிக்க பொருட்களில் இருப்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். இதில் கிராம்பு மற்றும் ஏலக்காய் போன்றவையும் அடங்கும். இவற்றை சமையலுக்குப் பயன்படுத்துவதால் சாதாரண பொருளாகி விடாது. கிராம்பும் ஏலக்காயும் மூலிகை வகையைச் சார்ந்த தாவரங்கள். மகாலட்சுமி தேவிக்கு மிகவும் விருப்பமான பொருட்களில் இவை அடங்கும். இந்த இரண்டையும் வைத்து செல்வ வளத்தை பெருக்குவது எப்படி என்பது பற்றி இந்தப் பதிவில் காண்போம்.

செல்வத்தில் நாட்டம் கொண்ட பலருக்கும் தங்கள் குடும்பத்தில் மகாலட்சுமி தேவி நிரந்தரமாக வாசம் செய்ய ஆசை இருக்கும். மகாலட்சுமியை வசியம் பண்ண பலவிதமான வழிகள் உண்டு. பணம் சம்பாதிப்பது கடினமான காரியம் என்றால், சேர்த்த பணத்தை நிலைக்க வைப்பது அதைவிட கடினமானதாக இருக்கும். ஒரு பக்கம் பணம் வந்து வந்து கொண்டே இருந்தாலும் மறுபக்கம் அது நிலைக்காமல் தேவையற்ற வழிகளில் கரைந்து கொண்டே இருக்கும். அடிக்கடி மருத்துவ செலவுகள் ஏற்படுதல், இயந்திரங்கள் பழுதடைதல், வண்டி வாகன செலவுகள் என்று எதிர்பாராத செலவுகள் உண்டாகிக்கொண்டே இருக்கும். இதற்குக் காரணம் மகாலட்சுமியின் அருள் குறைவு என்பதுதான் அர்த்தம்.





மகாலட்சுமியின் அருளைப் பெறுவதற்கு சுலபமான வழிபாடு ஒன்று உண்டு. ஒரு வெள்ளிக்கிழமை அன்று நீங்கள் வழக்கமாக செய்யக்கூடிய பூஜைகுரிய ஏற்பாடுகளை செய்த பின் குத்துவிளக்கு ஒன்றை தனியே பூஜையில் வைக்கவும். விளக்கிற்கு மஞ்சள், குங்குமம் வைத்து மலர்களால் அலங்காரம் செய்து விளக்கின் பாதத்தை சுற்றி பூக்களால் அலங்காரம் செய்யவும். பூக்களில் மணமிக்க மகாலட்சுமி பெரிதும் விரும்பும் மல்லிகை மலர் கட்டாயம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்.

பின்னர் கிராம்புகளை 54 அல்லது என்ற 108 என்ற எண்ணிக்கையில் எடுத்துக் கொள்ளுங்கள். அதே எண்ணிக்கையில் ஏலக்காயும் எடுத்துக் கொள்ளுங்கள். ஏலக்காயை ஊசி நூல் கொண்டு கோர்த்து மாலையாக செய்து கொள்ளுங்கள். கிராம்பை பூ கட்டுவது போன்று ஒவ்வொன்றாக வைத்து கட்டிக் கொள்ளுங்கள். நைவேத்தியமாக சர்க்கரை பொங்கல், உலர் திராட்சை, மாதுளம் பழம், நெல்லிக்கனிகள் ஐந்து இவற்றை ஒரு தட்டில் விளக்கின் முன்னால் வைத்துக் கொள்ளுங்கள்.

வெற்றிலைப் பாக்கு, பழம் வைத்து அதன் மீது ரூபாய் 501 (அவரவர் இஷ்டம்) காணிக்கை வைத்து இந்த இரண்டு மாலைகளையும் விளக்கின் மீது சாற்றி விளக்கின் ஐந்து முகங்களிலும் தீபம் ஏற்ற வேண்டும். தீபம் ஏற்றிய பின் மகாலட்சுமி சுலோகத்தை வாசிக்கலாம். தொடர்ந்து 21 வாரங்கள் இந்த வழிபாட்டை முறையாக செய்து வருவதன் மூலம் குபேர யோகத்தை அடையலாம் என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இதனால் மகாலட்சுமி தேவியின் அருள் பரிபூரணமாக உங்களுக்குக் கிடைக்கும்.

மாலைகளை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. அதன் நிறமும் மணமும் மாறும் பட்சத்தில் வேண்டுமானால் மாற்றிக் கொள்ளலாம். இந்த பூஜையை வெள்ளிக்கிழமை செய்ய முடியாத நிலையில் ஒரு பௌர்ணமியிலும் துவங்கி செய்யலாம். மகாலட்சுமி உங்களது வீட்டில் வாசம் செய்ய இந்த பூஜை முறை சிறந்த பலனளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், முழு நம்பிக்கையோடு இதை செய்து பயனடையலாம். பூஜை செய்ய வேண்டிய நேரம் காலை 6 முதல் 7, மதியம் 1 முதல் 2, இரவு 8 முதல் 9 மணி வரை.

நாமும் மகாலட்சுமியின் அம்சமான குத்துவிளக்குக்கு மணமிக்க ஏலக்காய் மாலைகளை அணிவித்து வாழ்வில் செல்வந்தராக உயர்வோம்.

-எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி _620015

## தினம் ஒரு தலைவர்கள்

# கர்த்தார் சிங் வரலாறு

கர்த்தார் சிங் 1896-ஆம் ஆண்டு மே 24 ஆம் நாள் பிறந்தார். பகத் சிங் இவரைத் தன் வழிகாட்டியாக குறிப்பிடுகிறார். இவர் கதர் கட்சியை உருவாக்கியவர்களில் முதன்மையானவர்.



**இளமைக்காலம்**

கர்த்தார் சிங் பஞ்சாப் மாநிலத்தில் லூதியானா மாவட்டத்தில் சரபா என்ற கிராமத்தில் பிறந்தார். அவரது தந்தை சர்தார் மங்கள் சிங். அவரது தாயார் சாஹிப் கபூர். அவரின் இளவயதிலேயே அவரது தந்தை இறந்துவிட்டார். அவரது தாத்தாவின் அரவணைப்பில் சொந்த கிராமத்தில் ஆரம்பக் கல்வியை முடித்தார். பின்னர் லூதியானாவில் மெட்ரிகுலேஷன் படித்தார். பின்னர் ஒரிசாவில் உள்ள அவரது சித்தப்பா வீட்டில் இருந்து பத்தாவது முடித்துக் கல்லூரியில் சேர்ந்தார். பின்னர் அமெரிக்காவில் வேலை பார்க்கச் சென்றார்.

**அமெரிக்க வாழ்க்கை**

ஜனவரி 1912-ல் சான்ஃபிரான்சிஸ்கோ துறைமுகத்தில் கப்பல் நங்கூரமிட்டது. அமெரிக்க அதிகாரிகள் மற்ற நாட்டவரைவிட இந்தியர்களைக் கடுமையாக சோதனையிட்டனர். கர்த்தார் சிங் இது பற்றி மற்றவர்களிடம் விசாரித்தபோது அவர்கள் "இந்தியர்கள் அடிமை நாட்டு குடிமக்கள் என்பதால் மோசமாக நடத்தப்படுகின்றனர்" என்றனர். இது கர்த்தார் சிங்கை கடுமையாகப் பாதித்தது. அந்த காலகட்டத்தில் (1914) இந்தியர்கள் வெளி நாட்டில் தொழிலாளியாகவோ பிரித்தானிய அரசின் சாம்ராஜ்ய விஸ்தரிப்புக்குப் போராடும் இராணுவ வீரர்களாகவோ தான் இருந்தார்கள். கர்த்தார் சிங் பெர்க்ளேயில் உள்ள கலிபோர்னிய பல்கலைக்கழகத்தில் வேதியியல் பட்டப்படிப்புக்காக சேர்ந்தார். பழத்தோட்டத்தில் பழம் சேகரிக்கும் வேலையும் செய்தார். அப்போதிருந்தே கர்த்தார் சிங் மற்றவர்களுடன் சேர்ந்து இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்தார்.



**கதர் கட்சியும் கதர் செய்தித்தாளும்**

கர்த்தார் சிங் 1913-ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் நாள் சோஹன்சிங், ஹர்தயாள் ஆகியோருடன் சேர்ந்து கதர் கட்சியை உருவாக்கினார். அதன் தாரக மந்திரம் "இந்திய சுதந்திரத்திற்காக அனைத்தையும் பணயம் வைப்போம்" என்பதாகும். 1913-ஆம் ஆண்டு நவம்பர் 1 அன்று "கதர்" என்ற செய்தித்தாள் வெளியானது. பஞ்சாபி, ஹிந்தி, உருது, பெங்காலி, குஜராத்தி, புஷ்டோ மொழிகளில் வெளியானது. ஹர்தயாள் எழுத்து வேலையும் கர்த்தார் சிங் அச்சு வேலையும் செய்தனர். உலகம் முழுவதும் உள்ள இந்தியர்களுக்கு அனுப்பப்பட்டது. குறைந்த காலத்தில் இது எல்லோருடைய ஆதரவையும் பெற்றது. கர்த்தார் சிங்கின் வீரம் பகத் சிங்கைக் கவர்ந்தது. அவர் கர்த்தார் சிங்கைத் தனது குருவாக ஏற்றார்.

**இந்து-ஜெர்மன் ஆலோசனை**

முதலாம் உலகப்போர் ஆரம்பித்த உடன் கதர் கட்சி இந்திய சுதந்திரத்திற்கு இது நல்ல சந்தர்ப்பம் என்று நினைத்தது. பிரித்தானிய அரசுக்கு எதிரான போர் என்று அச்சிட்டு ஆயிரக்கணக்கான பிரசுரங்கள் கிராமம், நகரம், இராணுவம் என்று எங்கெங்கும் விநியோகிக்கப்பட்டன. கர்த்தார் சிங் கொழும்பு வழியாக இந்தியா வந்தார். அவருடன் சத்யேன்சென், விஷ்ணு கணேஷ் பிங்களே மற்றும் பலர் வந்தனர். இன்னும் 20,000 வீரர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்தனர் . கர்த்தார் சிங்கும் பிங்களேயும் ராஷ் பிஹாரி போஸ் அவர்களை பனாரஸில் சந்தித்தனர். பஞ்சாப் ராணுவத்துடன் சேர்ந்து பிரித்தானிய அரசை எதிர்க்கத் திட்டமிட்டிருந்தனர். இது இந்து-ஜெர்மானிய சதி என்று குறிப்பிடப்படுகிறது.

**கிர்பால் சிங்கின் துரோகம்**

கதர் கட்சியின் செயல்பாடுகளை கிர்பால் சிங் என்ற போலீஸ்காரர் அரசிடம் காட்டிக் கொடுத்துவிட்டார். பெரும்பாலான கதர்கட்சியினர் கைது செய்யப்பட்டனர். கர்த்தார் சிங், ஹர்னாம் சிங், ஜகத் சிங் ஆகியோர் ஆப்கானிஸ்தானத்திற்குத் தப்பிச் செல்லும்படி கூறப்பட்டனர். அவரது தோழர்கள் அனைவரும் அரசாங்கத்திடம் சிக்கிக் கொண்டிருக்கும் பொழுது தாம் மட்டும் தப்பிச் செல்ல விருப்பமில்லாமல் திரும்பிவிட்டனர். அரசிடம் மாட்டிக்கொண்டனர். வழக்கு விசாரணையின் போது அவரது திறமைகள் நீதிபதியைக் கவர்ந்தது. அவர் இரக்கத்தை எதிர்பார்க்கவில்லை. தனது செயலுக்குப் பெருமைப்பட்டார். எனவே அவர் ஆபத்தானவராகக் கருதப்பட்டு 1915-ஆம் ஆண்டு நவம்பர் 16 அன்று லாகூர் மத்திய சிறையில் தூக்கிலிடப்பட்டார். அப்போது அவருக்கு வயது 19. அவருடன் கதர்கட்சியைச் சேர்ந்த 24 பேர் தூக்கிலிடப்பட்டனர்.

# விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்வதற்கான திட்டம் இல்லை: நிர்மலா சீதாராமன்



புதுடெல்லி, மார்ச் 25:

விவசாயக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வதற்கான எந்த திட்டமும் மத்திய அரசின் பரிசீலனையில் இல்லை என நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திங்கள்கிழமை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, மக்களவையில் பேசிய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், "விவசாயக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வதற்கான எந்த திட்டமும் மத்திய அரசிடம் இல்லை. இருப்பினும், விவசாயிகளின் பொருளாதார நிலையை வலுப்படுத்த அரசு பல்வேறு விதமான நடவடிக்கைகளை எடுத்துள்ளன. அதில் கிசான் கடன் அட்டை மூலம் சரியான நேரத்தில் போதுமான கடன் வழங்குவது. இந்த அட்டையின் கீழ், திருத்தப்பட்ட வட்டி மானியத் திட்டத்தின் அடிப்படையில், ரூ. 3 லட்சம் வரையிலான பயிர்க் கடன் மானிய வட்டி விகிதங்களில் வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், சரியான நேரத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு கூடுதல் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன.

மேலும், இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள முன்னுரிமைத் துறை கடன் வழிகாட்டுதல்களின்படி, வேளாண்மை உள்ளிட்ட பொருளாதாரத்தின் முன்னுரிமைத் துறைகளுக்கு வங்கி அமைப்பிலிருந்து பிணையமில்லா குறுகிய கால விவசாயக் கடன்களை ரூ.1.60 லட்சத்திலிருந்து ரூ.2 லட்சமாக அரசு உயர்த்தியுள்ளது" எனத் தெரிவித்தார்.

# சொமாட்டோவை தொடர்ந்து ஸ்விக்கியிலும் கட்டணம் உயர்வு: வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி




புதுடெல்லி, மார்ச் 25:

இந்தியாவில் உணவு டெலிவரி சேவையில் ஸ்விக்கி, சொமாட்டோ போன்ற நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. வாடிக்கையாளர்கள் தங்களுக்கு பிடித்த உணவுகளை, விருப்பமான ஹோட்டல்களில் இருந்து வீட்டிலிருந்தபடியே இந்த செயலிகள் மூலம் ஆர்டர் செய்யலாம்.

ஆர்டர் செய்த சில நிமிடங்களிலேயே, சுடச்சுட உணவை டெலிவரி பணியாளர்கள் வீட்டிற்கு கொண்டு வந்து கொடுத்துவிடுவார்கள். சென்னை, பெங்களூர், டெல்லி போன்ற பெருநகரங்களில் மட்டும் அல்லாமல், சிறிய நகரங்களிலும் தற்போது சொமாட்டோ, ஸ்விக்கி போன்ற நிறுவனங்கள் தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தியுள்ளன.

இந்த நிலையில், சொமாட்டோ தனது லாப வரம்பை அதிகரிக்கும் நோக்கில் 'பிளாட்பார்ம் கட்டணத்தை' கடந்த சில தினங்களுக்கு முன்பு உயர்த்தியது.

ஒரு ஆர்டருக்கான பிளாட்பார்ம் கட்டணம் ரூ. 12.50-இல் இருந்து ரூ. 14.90 ஆக அதிகரிக்கப்படுவதாக சொமாட்டோ அறிவித்திருந்த நிலையில், தற்போது ஸ்விக்கி நிறுவனமும் கட்டணத்தை உயர்த்திவாடிக்கையாளர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது. ரூ.14.99 ஆக இருந்த பிளாட்பார்ம் கட்டணத்தை ரூ.17.58 ஆக உயர்த்தியுள்ளது ஸ்விக்கி.

ஏற்கனவே சிலிண்டர் தட்டுப்பாட்டால் ஹோட்டல்கள் உணவு விலையை அதிகரித்துள்ள நிலையில், தற்போது டெலிவரி நிறுவனங்களும் அடுத்தடுத்து கட்டணத்தை உயர்த்தியுள்ளது வாடிக்கையாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.4.21 கோடி

திருமலை, மார்ச் 25:

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இலவச தரிசனத்தில் பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 86 ஆயிரத்து 91 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 29 ஆயிரத்து 664 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று தேவஸ்தானம் அறிவித்த ஒருநாள் உண் டியல் காணிக்கை ரூ.4 கோடியே 21 லட்சம் ஆகும்.

# பெண்களுக்கு ரூ.18,000 நிதியுதவி: அகிலேஷ் யாதவின் அதிரடி வாக்குறுதி

லக்னோ, மார்ச் 25:

உத்தர பிரதேச முன்னாள் முதல்-மந்திரியும்,சமாஜ்வாடி கட்சி தலைவருமான அகிலேஷ் யாதவ் தனது எக்ஸ் வலை தளத்தில் கூறி இருப்பதாவது:-

மக்கள் தொகையில் பெண்களின் முழுமையான சுதந்திரம் மற்றும் பாதுகாப்பிற்கும், அத்துடன் அவர்களின் உரிமைகள், அதிகாரமளித்தல் மற்றும் மேம்பாட்டிற்கும் நாங்கள் உறுதியுடன் இருக்கிறோம், இனியும் இருப்போம். குடும்பம், சமூகம் மற்றும் நாட்டை வலுப்படுத்துபவர்கள் மதிக்கப்படும்போது, அவர்களின் மரியாதையும் மன உறுதியும் அதிகரிக்கும். மக்கள் மேம்பாட்டு ஆணையத்தில் சேர்க்கப்பட்டுள்ள 'அ' என்ற எழுத்தை நாங்கள் அறிமுகப்படுத்துவோம். இதன் பொருள் 'அதி அபாதி' என்பதாகும். அதாவது, ஒவ்வொரு குழந்தை, இளம் பெண், பெண் ஆகியோருக்கும் சமூக-பொருளாதார ரீதியாக சம மரியாதை அளிக்கப்பட்டு, அவர்கள் தங்கள் சொந்த காலில் நின்று வளர வேண்டும். சமாஜ்வாதி ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் கொண்டு வருவதன் மூலம், உத்தரப் பிரதேசத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான தனது உறுதிப்பாட்டை நிறைவேற்றும் அதே வேளையில், பெண்களின் பொருளாதாரப் பாதுகாப்பைத் தனது கட்சி மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

# ஈரான் போர்! தொழில்நுட்பத் துறையில் நேரடித் தாக்கம் இல்லை: இன்ஃபோசிஸ்




புதுடெல்லி, மார்ச் 25:


மேற்கு ஆசிய மோதலின் காரணமாக தொழில்நுட்பத் துறையில் நேரடித் தாக்கம் இல்லை என இன்ஃபோசிஸ் இணை நிறுவனர் கிரிஸ் கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து கடந்த பிப்.28 ஆம் தேதி ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. இதனைத் தொடர்ந்து ஈரானும் வளைகுடா நாடுகளில் உள்ள முக்கிய கட்டமைப்புகள் மீது பதில் தாக்குதல்களை நடத்தியது. போர் இருபக்கமும் தொடர்ந்த நிலையில், ஈரான் உலகளாவிய எண்ணெய் வழிப்போக்குவரத்தின் முக்கிய கடல்வழிப் பாதையான ஹோர்முஸ் நீரிணையை முடக்கியது. இதன்காரணமாக, இந்தியா உள்பட உலகின் பல்வேறு நாடுகளில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்தியா நடத்திய பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு ஹோர்முஸ் நீரிணை வழியாக ஒவ்வொரு கப்பலாக இந்தியா நோக்கி வந்து கொண்டிருக்கின்றது.

இதுகுறித்து பேசிய இன்ஃபோசிஸ் இணை நிறுவனர் கிரிஸ் கோபாலகிருஷ்ணன், "தொழில்நுட்பத் துறையில் நேரடித் தாக்கம் இல்லை. ஆனால் சாமானிய மக்கள் மற்றும் பொருளாதாரத்திற்கு நேரடி பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இது கவலைக்குரிய விஷயம். போர் மேலும் தீவிரமடையாது என்று நம்புகிறேன். ஏனென்றால், போரால் நேரடியாக பாதிக்கப்பட்ட ஒரு பெரிய புலம்பெயர் சமூகம் உள்ளது" எனத் தெரிவித்தார்.

# 'ஏஐ'யால் வழக்கறிஞராக முடியாது: உச்ச நீதிமன்ற நீதிபதி கருத்து



பெங்களூரு, மார்ச் 25:

உச்ச நீதிமன்ற பார் கவுன்சில் சார்பில் கர்நாடக தலைநகர் பெங்களூருவில் நேற்று தேசிய மாநாடு நடைபெற்றது.

இதில் உச்சநீதிமன்ற நீதிபதி விக்ரம் நாத் பேசியதாவது: "செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில் நுட்பத்தால் நீதித் துறையின் சேவைகள், திறன்களை மேம்படுத்த உதவ முடியும்.

ஆனால் ஏஐ, வழக்கறிஞரா கவோ, நீதிபதியாகவோ செயல்பட முடியாது. ஒரு வழக்கில் 10 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டால் சூழ்நிலைகளின் அடிப்படையில் 9 பேருக்கு ஜாமீன் வழங்கி, ஒருவருக்கு ஜாமீன் மறுக்க முடியும்.

ஆனால் ஏஐ தொழில் நுட்பம் இவ்வாறு செயல்படாது. இந்த தொழில் நுட்பத்தால் வழக்கறிஞராகவும் செயல்பட முடியாது. இவ்வாறு நீதிபதி விக்ரம் நாத் பேசினார்.

உச்ச நீதிமன்ற நீதிபதி என். கோடீஸ்வர் சிங் பேசும்போது, "நான் வழக்கறிஞராக இருந்தபோது ஆரோக்கியமாக இருந்தேன். ஆனால் நீதிபதியாக பதவியேற்ற பிறகு எனது உடல் நலன் பாதிக்கப்பட்டது.

பணி தொடர்பான மன அழுத்தம் காரணமாக பெரும்பாலான நீதிபதிகள் ரத்த அழுத்தம் மற்றும் பல்வேறு நோய்களால் பாதிக்கப் படுகின்றனர். எங்களது பணி சூழல் குறித்து சிலருக்கு மட்டுமே நன்றாக தெரியும். கீழமை நீதிமன்ற நீதிபதிகளின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது" என்றார்.

உச்ச நீதிமன்ற நீதிபதி உஜ்ஜல் புயான் பேசும்போது, "பல்வேறு மாநிலங்களில் நீதித் துறைக்கான ஒதுக்கீடு ஒரு சதவீதத்துக்கும் குறைவாக உள்ளது. இதனால் நீதித் துறையின் செயல்பாடு பாதிக்கப்பட்டு உள்ளது.

ஒரு நீதிபதியின் பணி காலை 10 மணி முதல் மாலை 5 மணியோடு நிறைவடைந்து விடாது. அவர் 24 மணி நேரமும் பணியாற்றுகிறார். இதை அனைத்து தரப்பினரும் கவனத்தில் கொள்ள வேண்டும்" என்றார்.

# ஆந்திராவில் சோகம்: குரங்குகள் தாக்கியதில் 68 வயது மூதாட்டி உயிரிழப்பு

அமராவதி, மார்ச் 25:

ஆந்திர மாநிலம் காக்கிநாடா மாவட்டத்தில், உள்ள பெத்திபாலம் கிராமத்தை சேர்ந்த தானபோயின சின்ன புல்லி 68 வயது மூதாட்டி தனது மூன்று ஏக்கர் விவசாய நிலத்திற்கு அருகில் உள்ள ஒரு வீட்டில் தனது மகளின் குடும்பத்துடன் வசித்து வந்தார். இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை வழக்கம்போல தனது அன்றாட வேலைகளுக்காக தோட்டத்திற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்துகொண்டிருந்தார். அப்போது அங்கு இருந்த குரங்குகள் அவரை திடீரென சூழ்ந்து கொண்டது. குரங்குகள் அவரை ஆக்ரோஷமாக தாக்க தொடங்கின. குரங்குகளிடம் இருந்த தப்பிக்க ஓடினார். அந்த பதற்றத்தில் நிலைதடுமாறி கீழே விழுந்த அவருக்கு, தலையிலும் உடலிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டன. ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் இந்த தாக்குதல் நடந்ததால், இதில் மூதாட்டி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக துடிதுடித்து உயிரிழந்தாக போலீசார் தெரிவித்தனர்.

# இந்தியாவுக்கு நன்றி தெரிவித்த ஈரான்!

புதுடெல்லி, மார்ச் 25:


இந்தியாவுக்கு நன்றி தெரிவித்து ஈரான் தூதரகம் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது.

அமெரிக்கா - இஸ்ரேல், ஈரான் போர் கடந்த பிப். 28 முதல் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. இதில், ஈரான் உச்ச தலைவர் கமேனி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவில் ஷியா முஸ்லிம்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர். மேலும், கமேனி கொல்லப்பட்டதற்கு பல கட்சிகள் இந்தியா முழுவதும் இரங்கல் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து, காஷ்மீரில் குழந்தைகள் உள்பட பலரும் ஈரானுக்கு நன்கொடை வழங்கும் காணொளிகளைப் பகிர்ந்த ஈரான் தூதரகம், "மனிதாபிமானம் மற்றும் ஒற்றுமை உணர்வுடன் ஈரான் மக்களுக்கு துணை நிற்கும் காஷ்மீர் மக்களுக்கு எங்களின் இதயம் நிறைந்த நன்றி" எனக் குறிப்பிட்டுள்ளனர். மேலும், "உங்களின் கருணையை ஒருபோதும் மறக்கமாட்டோம். நன்றி இந்தியா!" என ஈரான் தூதரகம் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது. மேலும், ஈரானுக்கு தங்களது உண்டியல் சேமிப்புகளை காஷ்மீர் குழந்தைகள் அனுப்பும் காணொளியையும் பகிர்ந்து அவர்கள் நன்றி தெரிவித்தனர்.

இந்திய அரசு ஈரான் மீதான அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல்களை ஒருமுறைகூட கண்டிக்கவில்லை. ஆனால், வளைகுடா நாடுகள் மீது ஈரான் நடத்திய தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்திருந்தது. இதில் இந்திய எதிர்க்கட்சிகள் ஈரானுக்கு எதிரான அமெரிக்க, இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு வன்மையாகக் கண்டனம் தெரிவித்தது .

# பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்வது இந்தியாவுக்கு பின்னடைவு: காங்கிரஸ்



புதுடெல்லி, மார்ச் 25:

மேற்காசியப் போர் தொடர்பான மத்தியஸ்தத்தில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளதாக வந்துள்ள செய்திகள் உண்மையாக இருக்குமானால், அது இந்தியாவுக்கு ஒரு பின்னடைவு என்று காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், "அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கும், ஈரானுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்வதில் பாகிஸ்தானும் ஈடுபட்டுள்ளதாக முன்னணி சர்வதேச ஊடகங்கள் பலவும் தெரிவித்துள்ளன. இது உண்மை எனில், இந்தியாவுக்கு பின்னடைவும் நிராகரிப்பும் ஏற்பட்டுள்ளதையே உணர்த்துகிறது. தன்னைத்தானே விஸ்வகுரு என்று கூறிக்கொள்ளும் அந்த நபரே இதற்கெல்லாம் காரணம்.

ஆபரேஷன் சிந்தூரில் சந்தேகத்துக்கு இடமின்றி நமது ராணுவம் வெற்றி பெற்ற போதிலும், அதன் பிறகான பாகிஸ்தானின் ராஜதந்திர ஈடுபாடும், கதைகளை உருவாக்குவதில் வெளிப்படுத்திய நிர்வாக அணுகுமுறையும் மோடி அரசாங்கத்தைவிட குறிப்பிடத்தக்க அளவில் சிறப்பாகவே இருந்தது. இதன் காரணமாக, அரசியல், சமூகம், பொருளாதாரம் என அனைத்திலும் மிகவும் அபாயகரமான சூழ்நிலையை சந்தித்து வந்த பாகிஸ்தான், ஒரு புதிய வாழ்வை பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் 22-ம் தேதி பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதல்களுக்கு முக்கிய காரணமாக இருந்தது பாகிஸ்தான் ராணுவத் தளபதி அசிம் முனீரின், இந்தியாவுக்கு எதிரான ஆத்திரமூட்டும், தூண்டும் பேச்சுக்களே. ஆனால், அவரைத்தான் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், வெள்ளை மாளிகைக்கு பலமுறை அழைத்தார். முன் எப்போதும் இருந்திராத வகையில், அதிபர் ட்ரம்ப் அவருக்கு மதிய விருந்து உட்பட இரண்டு முறை உபசரித்தார். பாகிஸ்தானின் ஆளும் வர்க்கம், அதிபர் ட்ரம்ப்புடன் நெருக்கமான உறவை வளர்த்துக் கொண்டுள்ளது. அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது வான் தாக்குதலை நடத்துவதற்கு சரியாக இரண்டு நாட்களுக்கு முன்புதான் பிரதமர் மோடி இஸ்ரேலுக்கு சென்றார். விவேகமற்ற அவரது இந்த பயணம், இந்திய அரசியல் வரலாற்றில் மிக மோசமான நிகழ்வாகவே நினைவுகூரப்படும். நாம் நடுநிலையாளராகச் செயல்பட்டு மத்தியஸ்தம் செய்திருக்கக் கூடிய; செய்திருக்க வேண்டிய ஒரு வாய்ப்பை அந்த பயணம் பாழ்படுத்திவிட்டது. பிரதமரின் கட்டிப்பிடிக்கும் ராஜதந்திரம் இன்று மிகக் கடுமையாக அம்பலமாகியுள்ளது. இதற்கான விலையை செலுத்தும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது" என குற்றம் சாட்டியுள்ளார்.

# அன்புமணிக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்கியது யார்? சுப்ரீம் கோர்ட்டு கேள்வி

புதுடெல்லி, மார்ச் 25:

பா.ம.க.வில் தந்தை ராமதாஸ் -மகன் அன்புமணி இடையே மோதல் ஏற்பட்டது. இதையடுத்து, இரு தரப்பும் கட்சிக்கு உரிமை கோரி வந்த நிலையில், ஆவணங்களின் அடிப்படையில் பா.ம.க.வின் சின்னம் மற்றும் கொடி அன்புமணி தரப்புக்கே சொந்தம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்தது. இந்த விவகாரம் தொடர்பாக ராமதாஸ் தரப்பு சுப்ரீம் கோர்ட்டை அணுகியது. இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. அப்போது, "அன்புமணி தரப்புக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்கியது யார்?" என்று கேள்வி எழுப்பிய சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி, சின்னம் தொடர்பான விவகாரத்தில் தேர்தல் ஆணையம் 'பிரண்ட்லி மேட்ச்' ஆடுகிறது என்றும் கருத்து தெரிவித்தார். அப்போது ஆவணங்களின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் சின்னத்தை ஒதுக்கியது என்று அன்புமணி தரப்பு கூறியது. இதையடுத்து, சின்னம் தொடர்பாக இரண்டு நாட்களுக்குள் சிவில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அந்த மனுவை மூன்று நாட்களுக்குள் உரிமையியல் நீதிமன்றம் விசாரித்து முடிவு எடுக்க வேண்டும் என்றும் தலைமை நீதிபதி உத்தரவிட்டார்.

# 'இஸ்ரேலில் உள்ள இந்தியர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர்' - மத்திய அரசு



புதுடெல்லலி, மார்ச் 25:

அரபு நாடுகளில் உள்ள அமெரிக்காவின் ராணுவ நிலைகள் மீது ஈரான் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது.

சுமார் 3 வாரங்களுக்கு மேல் நீடித்து வரும் இந்த போரில், ஈரான் முற்றிலும் சீரழிந்து விட்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஈரானின் கடற்படை, விமானப்படை அனைத்தும் நிர்மூலமாக்கப்பட்டுள்ள தாக அமெரிக்கா அறிவித்துள்ளது. ஆனாலும் ஈரான் தொடர்ந்து ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகிறது.

குறிப்பாக இஸ்ரேலின் அரணாக விளங்கும் 'அயர்ன் டோம்' பாதுகாப்பு அம்சத்தை தாண்டி, ஈரானின் ஏவுகணைகள் மற்றும் கொத்துக்குண்டுகள் அந்த நாட்டை பதம் பார்த்து வருகின்றன.

இதில் ஜெருசலேம், டெல் அவிவ் நகரங்கள் பெரும் சேதத்தை சந்தித்து வருகின்றன. இந்த நிலையில், இஸ்ரேலில் வசித்து வரும் இந்தியர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் செய்தியாளர்களிடம் கூறியதாவது;-

"இஸ்ரேலில் உள்ள இந்திய குடிமக்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர். இந்தியர் ஒருவர் காயமடைந்ததாக தகவல்கள் உள்ளன. காயமடைந்த நபர் தற்போது பாதுகாப்பாக உள்ளார். இந்த மோதலில் இதுவரை இந்தியர்கள் 6 பேர் உயிரிழந்துள்ளனர், ஒருவர் காயமடைந்துள்ளார்.

மேலும் ஒருவர் மாயமாகியுள்ளார். இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகம் நிலவரத்தை கண்காணித்து வருகிறது."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தலைவராக பிகார் முதல்வர் நிதீஷ் குமார் மீண்டும் தேர்வு

புதுடெல்லி, மார்ச் 25:

ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தலைவர் நிதீஷ் குமார், மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் பொருட்டு பிகார் முதல்வர் பதவியில் இருந்து விலகுவதாக சமீபத்தில் அறிவித்தார். அவர் கூறியபடியே பிகாரில் இருந்து மாநிலங்களவைக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். எனினும் பிகாரில் அடுத்த முதல்வர் யார் என்பது அறிவிக்கப்படாமல் உள்ளதால் அவர் இன்னும் தனது முதல்வர் பதவியை ராஜிநாமா செய்யவில்லை. சட்டப்பேரவை, சட்டப்பேரவை, மக்களவை என பல்வேறு பதவிகளில் இருந்து நான் மாநிலங்களவை உறுப்பினராக வேண்டும் என்று விரும்புவதாகவும் கூறியிருந்தார். இந்நிலையில் ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தலைவராக நிதீஷ் குமார் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்த்து யாரும் போட்டியிடாததால் நிதீஷ் குமார் ஒருமனதாகத் தேர்வாகியுள்ளதாக கட்சி அறிவித்துள்ளது. இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நிதீஷ் குமாருக்கான சான்றிதழ் வழங்கப்படும் என்றும் கட்சி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நத்தம்: திமுக எம்எல்ஏ மகனுக்கு சொந்தமான குவாரியில் மர்மமாக உயிரிழந்த இளைஞர்

**திண்டுக்கல், மார்ச்.25:** திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சரளைபட்டியில் உள்ள ஸ்ரீரங்கம் திமுக எம்எல்ஏ பழனியாண்டியின் மகனுக்குச் சொந்தமான குவாரியில் இளைஞர் உடல் மீட்கப்பட்டது.

இது குறித்து உரிய விசாரணை நடத்துமாறு அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி உள்ளிட்டோர் வலியுறுத்தியுள்ளனர். நத்தம் அருகே சரளைப்பட்டியில் ஸ்ரீரங்கம் திமுக எம்எல்ஏ பழனியாண்டியின் மகன் விஜயபாரதிக்கு சொந்தமான கல் குவாரி உள்ளது.

சரளைப்பட்டியைச் சேர்ந்தவர் கருப்பசாமி (25). தாய், தந்தை இல்லாமல் உறவினர் பராமரிப்பில் வசித்து வந்தார். இவர் மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில், குவாரி பகுதியில் சுற்றித் திரிந்து வந்துள்ளார். வாய்பேச முடியாத நிலையிலும் அடிக்கடி குவாரி பகுதிக்குச் சென்று வடமாநிலத் தொழிலாளர்களுடன் பழகி வந்துள்ளார்.

இந்நிலையில் கருப்பசாமியை கடந்த 10 நாட்களாக காணவில்லை. உறவினர்கள் பல இடங்களில் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. நேற்று முன்தினம் ஞாயிற்றுகிழமை குவாரியில் சுமார் 10 அடி பள்ளத்தில் கருப்பசாமி உடல் அழுகிய நிலையில் கிடந்துள்ளது.

இதுகுறித்து தகவல் அறிந்த கருப்பசாமியின் உறவினர்கள் குவாரியை முற்றுகையிட்டனர். இவர்களுடன் நாம் தமிழர் கட்சியினரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திண்டுக்கல் புறநகர் டிஎஸ்பி சங்கர் மற்றும் போலீஸார் கருப்பசாமியின் உடலைக் கைப்பற்றி, திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக நத்தம் போலீஸார் சந்தேக மரணம் என வழக்குப் பதிவு செய்து, நேற்று பிரேதப் பரிசோதனை முடிந்து உறவினர்களிடம் உடலை ஒப்படைத்தனர்.

இதனிடையே இந்த உயிரிழப்பு குறித்து உரிய விசாரணை நடத்த தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி: ஸ்ரீரங்கம் திமுக எம்எல்ஏ பழனியாண்டியின் மகன் விஜயபாரதிக்கு சொந்தமான குவாரி ஒன்றில், இளைஞர் கருப்பசாமி சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன.

ஏற்கெனவே, தனக்கு சொந்தமான குவாரியில் சட்டவிரோத நடவடிக்கை இருப்பதாக வந்த குற்றச்சாட்டு குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர் மற்றும் கேமராமேன் மீது கொலைவெறி தாக்குதல் நடத்தி, தனது ஆளுங்கட்சி பலத்தால் மறைக்க முயன்றவர்தான் இந்த பழனியாண்டி.

மறுபடியும் அவர் மகனுக்கு சொந்தமான குவாரியில் சடலம் கிடைத்திருப்பது பொதுமக்கள் மத்தியில் பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது. இது குறித்து சட்டப்பூர்வமாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாமக தலைவர் அன்புமணி: கல்குவாரியில் உயிரற்ற நிலையில் கண்டெடுக்கப்பட்ட இளைஞர் கொலை செய்யப்பட்டாரா. அதன் பின்னணியில் வேறு சதித்திட்டங்கள் ஏதும் உள்ளனவா என்பது குறித்து விரிவான விசாரணை நடத்த அரசு ஆணையிட வேண்டும்.

# சென்னை: ஏமாற்றி காரை ரூ.7 லட்சத்துக்கு விற்று விட்டதால் ஆத்திரம்: வியாபாரியை கடத்தி தாக்கிய இளைஞர் கைது

**சென்னை, மார்ச்.25:** முகப்பேர், ரெட்டிப்பாளையத்தில் வசித்து வருபவர் சரவணன் (54). பழைய கார்களை விற்பனை செய்து வருகிறார். கடந்த 21-ம் தேதி மதியம் இவர், தனது மகனுடன் முகப்பேர் பகுதியில் உள்ள ஒரு ஓட்டலுக்கு சாப்பிட சென்றார்.

அப்போது, அங்கு காரில் வந்த கும்பல் ஒன்று, சரவணன் மற்றும் அவரது மகனை சரமாரியாக தாக்கியது. பின்னர், சரவணனை மட்டும் காரில் கடத்திச் சென்றது.

அவரை முகப்பேர் கிழக்கில், கோல்டன் ஜார்ஜ் நகர் அருகே வீடு ஒன்றில் அடைத்து வைத்தது. இதற்கிடையே, இந்த கடத்தல் விவகாரம் தொடர்பாக ஜெ.ஜெ.நகர் காவல் நிலையத்தில் சரவணன் குடும்பத்தினர் புகார் அளித்தனர்.

அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். பின்னர், இருப்பிடத்தை கண்டறிந்து சரவணனை மீட்டனர். கடத்தலில் ஈடுபட்ட திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை, வட மதுரையைச் சேர்ந்த மணிகண்டன் (29) என்பவரை போலீஸார் கைது செய்தனர். தலைமறைவாக உள்ள அவரது கூட்டாளிகளை தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட மணிகண்டன், சரவணனிடம் ரூ.7 லட்சத்துக்கு பழைய கார் ஒன்றை வாங்கி உள்ளார். இந்த காரை திருவள்ளூர் ஆர்டிஓ அலுவலக அதிகாரிகள் இரு தினங்களுக்கு முன்னர் பறிமுதல் செய்தனர்.

இதனால், சரவணன் தன்னை ஏமாற்றி அவரது காரை விற்பனை செய்துவிட்டதாக மணிகண்டன் கோபத்தில் இருந்துள்ளார். மேலும், காருக்காக கொடுத்த பணத்தையும் கொடுக்காததால், கூட்டாளிகளுடன் சேர்ந்து கடத்தலில் ஈடுபட்டதாக போலீஸார் தெரிவித்தனர்.

# மார்ச் 4-ல் விஜய் வாகனத்தை பின்தொடர்ந்தபோது விபத்தில் சிக்கிய மாணவர் மருத்துவமனையில் மரணம்

**திருச்சி, மார்ச்.25:** தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியில் நடைபெற்ற தவெக கூட்டத்துக்கு சென்ற தவெக தலைவர் விஜய் வாகனத்தை பின்தொடர்ந்து சென்றபோது, விபத்தில் சிக்கி காயமடைந்த கல்லூரி மாணவர் சிகிச்சை பலனின்றி நேற்று பரிதாபமாக உயிரிழந்தார்.

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியில் கடந்த மார்ச் 4-ம் தேதி நடைபெற்ற தவெக நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்க தவெக தலைவர் விஜய், திருச்சிக்கு விமானத்தில் வந்து, அங்கிருந்து காரில் செங்கிப்பட்டி புறப்பட்டார்.

அப்போது, திருச்சி தேசிய கல்லூரியில் பி.காம்., 3-ம் ஆண்டு படித்து வந்த மேலகல்கண்டார்கோட்டை மகாலட்சுமி நகரைச் சேர்ந்த பாண்டியன் மகன் விக்னேஷ்(19), தனது நண்பர் ஹாரூனுடன் இருசக்கர வாகனத்தில் விஜய் சென்ற காரை பின்தொடர்ந்தார்.

அப்போது விஜய்யின் காருக்கு அருகில் செல்ல முயன்றபோது, அவர்களது இருசக்கர வாகனம் வளம்பக்குடி என்ற இடத்தில் சாலையில் நின்று கொண்டிருந்த போலீஸ் வாகனத்தின் மீது மோதியது.

அதில் விக்னேஷ் மற்றும் அவரது நண்பர் ஹாரூன் இருவரும் நிலைதடுமாறி சாலையில் சென்ற மற்ற இருசக்கர வாகனங்களின் மீது விழுந்தனர். இதன் காரணமாக அடுத்தடுத்த வாகனங்கள் விபத்துக்குள்ளாகின.

இந்தச் சம்பவத்தில் விக்னேஷுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதையடுத்து அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பினர்.

அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், மேல் சிகிச்சைக்காக திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் ஐசியூவில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இதனிடையே இந்த விபத்தில் கால் முறிவு ஏற்பட்டு சிகிச்சை பெற்ற ஹாரூன் வீடு திரும்பினார். இந்நிலையில், கடந்த 20 நாட்களாக தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த விக்னேஷ், நினைவு திரும்பாமலேயே நேற்று பரிதாபமாக உயிரிழந்தார். இதையடுத்து, அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த விபத்து குறித்து செங்கிப்பட்டி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தேர்தலையொட்டி இதுவரை நடைபெற்ற சோதனைகளில் ரூ.152 கோடி ரொக்கம், பரிசு பொருட்கள் பறிமுதல்



**சென்னை, மார்ச்.25:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி பறக்கும் படைகள் மற்றும் நிலை கண்காணிப்பு படைகள் நடத்திய சோதனைகளில் இதுவரை ரூ.152 கோடி மதிப்பிலான ரொக்கம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் மார்ச் 15-ம் தேதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

அதன் படி, உரிய ஆவணமின்றி ரூ.50 ஆயிரத்துக்கு மேல் ரொக்கமாகவோ, ரூ.10 ஆயிரம் மதிப்புக்கு மேல் பொருட்களாகவோ கொண்டு செல்ல அனுமதி இல்லை.

விதிமீறல்களை கண்காணிக்க தமிழம் முழுவதும் தலா 2,106 பறக்கும் படைகள் மற்றும் நிலை கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் கணிசமான அளவு பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நேற்றைய நிலவரப்படி ரொக்கமாக ரூ.30.53 கோடி, ரூ.72 லட்சம் மதிப்பு மதுபானம், ரூ.6.47 கோடி மதிப்பு போதைப்பொருட்கள், ரூ.92.02 கோடி மதிப்பிலான தங்கம் மற்றும் வெள்ளி பொருட்கள், ரூ.22.19 கோடி மதிப்பிலான இலவசமாக வழங்க வைத்திருந்த பொருட்கள் மற்றும் பிற பொருட்கள் என மொத்தம் ரூ.152 கோடி மதிப்பிலானவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தேர்தல் பறக்கும் படை சோதனையில் டம்மி 'ஏ.கே 47' துப்பாக்கிகள் பறிமுதல்: படப்பிடிப்புக்கு சென்றவை என தெரிய வந்ததால் அதிகாரிகள் நிம்மதி



**சென்னை, மார்ச்.25:** தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் சோதனையில், படப்பிடிப்புக்காக வேனில் கொண்டு செல்லப்பட்ட டம்மி 'ஏ.கே 47' துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

அரசியல் கட்சிகள் பணம், பரிசு பொருட்களை கொடுத்து வாக்காளர்களை கவர்ந்து விடக்கூடாது என்பதற்காக, தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த வகையில், சென்னை, தி.நகர் சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட அசோக் நகர் 2-வது அவென்யூவில் நேற்று முன்தினம் இரவு தேர்தல் பறக்கும் படையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அவ்வழியாக வந்த வேன் ஒன்றை நிறுத்தி சோதனையிட்டதில், ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள் 10 இருந்தன. இதைக் கண்டு அதிர்ந்த பறக்கும்படை அதிகாரிகள், துப்பாக்கிகளை ஆய்வு செய்தபோது அவை அனைத்தும் டம்மி துப்பாக்கிகள் என்பது தெரியவந்தது. அதன் பிறகே அதிகாரிகள் நிம்மதியடைந்தனர்.

இதையடுத்து, அனைத்து துப்பாக்கிகளையும் பறிமுதல் செய்து வேன் ஓட்டுநர் மகேந்திரனை அசோக்நகர் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்தனர்.

இதில், அவை பிரபல இயக்குநர் லோகேஷ் கனகராஜ் நாயகனாக நடித்து வரும் புதிய படத்தில் பயன்படுத்தியதும், படப்பிடிப்பு முடிந்ததால், வடபழனியில் உள்ள கடையில் ஒப்படைக்க கொண்டு சென்றதும் தெரிந்தது.

மேலும், துப்பாக்கிகளுக்கு உரிய ஆவணங்கள் இருந்ததால் அதனை ஆய்வு செய்து மீண்டும் வேன் ஓட்டுநர் மகேந்திரனிடம் பறக்கும் படை அதிகாரிகள் ஒப்படைத்தனர்.

# கோடை விடுமுறையில் பள்ளி குழந்தைகள் ஜப்பானிய மொழியை கற்பதற்கு வாய்ப்பு: இந்திய - ஜப்பான் தொழில் வர்த்தக சபை ஏற்பாடு




**சென்னை, மார்ச்.25:** கோடை விடுமுறையில் பள்ளிக் குழந்தைகளுக்கு ஜப்பானிய மொழி பயிற்சி அளிக்க இந்திய - ஜப்பான் தொழில் வர்த்தக சபை சிறப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இதுதொடர்பாக, அதன் பொதுச்செயலாளர் சுகுணா ராமமூர்த்தி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்திய - ஜப்பான் தொழில் வர்த்தக சபையின் மொழிப் பள்ளி, பள்ளி குழந்தைகளுக்கான ஜப்பான் மொழி பயிற்சியைத் தொடங்க உள்ளது.

மொத்தம் 40 மணி நேரம் கொண்ட இந்த பயிற்சியில் 8 முதல் 17 வயது வரையுள்ள குழந்தைகள் சேரலாம்.

இந்த பயிற்சியானது, ஜப்பானிய மொழி பேச்சுப் பயிற்சி, ஜப்பானிய குழந்தைகளிடமிருந்து பாடங்களை அறிந்து கொள்வது, ஜப்பானிய மொழி எழுதுவது, பாடல்கள் படிப்பது, ஓரிகாமி, ஜப்பானிய விளையாட்டுகள் போன்றவை இடம் பெறும்.

இதற்கான நேரடி வகுப்புகள் தேனாம்பேட்டை கே.பி. தாசன் சாலையில் அமைந்துள்ள இந்திய - ஜப்பான் தொழில் வர்த்தக சபை வளாகத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் காலை 9 மணி முதல் காலை 11 மணி வரை நடைபெறும்.

வகுப்புகள் ஏப்ரல் மாதம் தொடங்குகின்றன. பயிற்சியின் நிறைவில் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும் இணையவழி பயிற்சி திட்டம்

மேலும், இணைவழியில் ஜப்பானிய மொழி வகுப்பு ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை மட்டும் நடத்தப்பட உள்ளது.

இப்பயிற்சியில் சேருவோருக்கு ஜப்பானிய மொழி மட்டுமின்றி ஜப்பானிய கலை, கலாச்சாரம், வணிக நடைமுறைகள் ஆகியவையும் கற்றுத் தரப்படும்.

இந்த வகுப்பு ஏப்இப்பயிற்சியானது, டிசம்பர் மாதம் ஜப்பான் ஃபவுண்டேஷன் சார்பில் நடத்தப்பட உள்ள 'ஜெஎல்பிடி என்-5 லெவல்' தேர்வுக்கு தயார்படுத்தும் வகையில் அமைந்திருக்கும்.

இந்த இணையவழி பயிற்சி வகுப்பில் சேர விரும்பும் மாணவர்கள் 98842-00505, 73055-99874 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், www.ijcci.com என்ற இணையதளத்திலும் விவரங்களை அறியலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பழநியில் மார்ச் 26-ல் பங்குனி உத்திர திருவிழா தொடக்கம்

**பழநி, மார்ச்.25:** பழநி திருஆவினன்குடியில் பங்குனி உத்திரத் திருவிழா மார்ச் 26-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

விழாவின் 10 நாட்களும் பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

ஆறாம் நாளான 31-ம் தேதி இரவு 7 மணிக்கு மேல் திருக்கல்யாணமும், இரவு 9 மணிக்கு மேல் சுவாமி மணக் கோலத்தில் வெள்ளித் தேரோட்டமும் நடைபெற உள்ளது.

ஏப்.1-ம் தேதி முக்கிய நிகழ்வான தேரோட்டம் நடைபெறுகிறது.

ஏப்.4-ம் தேதி காலை 9 மணிக்கு திருவூடல் நிகழ்ச்சியும், இரவு 9 மணிக்கு மேல் கொடியிறக்குதலுடன் விழா நிறைவடைகிறது.

# வானிலை முன்னறிவிப்பு: கோவை, நீலகிரியில் மழைக்கு வாய்ப்பு

**சென்னை, மார்ச்.25:** தமிழகத்தில் கோவை, நீலகிரி மாவட்டங்களில் நாளை (மார்ச் 24) மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மன்னார் வளைகுடா முதல் மேற்கு விதர்பா வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (மார்ச் 24) கோவை, நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். 25, 26 தேதிகளில் தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.


27-ம் தேதி கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களிலும், 28, 29 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

இதர மாவட்டங்களில் ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

தமிழகத்தில் நாளை முதல் 25-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவிலும், 26, 27 தேதிகளில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 95 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 77 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேரவைத் தேர்தல் சிறப்பு பார்வையாளர் நியமனம்: பொதுமக்கள், அரசியல் கட்சிகள் தொடர்பு கொள்ளலாம்




**சென்னை, மார்ச்.25:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் சிறப்பு பார்வையாளராக பிரதாப் சிங் நியமிக்கப்பட்டார். தேர்தல்களில் அதிக செலவு செய்யும் மாநிலமாக தமிழகத்தை தேர்தல் ஆணையம் அடையாளம் கண்டுள்ளது.

கடந்த 2016 சட்டப்பேரவைத் தேர்தலின் போது, அரவக்குறிச்சி, திருப்பரங்குன்றம் ஆகிய தொகுதிகளில் அதிக செலவு செய்யப்படுவதை உறுதிசெய்து, தேர்தலையே தேர்தல் ஆணையம் நிறுத்தியது

அப்போது அரசியல்வாதிகளிடம் அதிகளவிலான ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து, கடந்த 2017-ல் நடைபெற்ற சென்னை ஆர்.கே. நகர் இடைத்தேர்தலிலும், பணப் பட்டுவாடா நடைபெறுவதை உறுதி செய்து, அந்ததேர்தலையும் தேர்தல் ஆணையம் நிறுத்தியது.

இதற்கிடையே தமிழகத்தில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 108 தொகுதிகள் அதிக செலவு செய்யக்கூடிய தொகுதிகளாக தேர்தல் ஆணையம் அடையாளம் கண்டுள்ளது.

வழக்கமாக இரு தொகுதிகளுக்கு ஒரு செலவினப் பார்வையாளரை நியமிக்கும் தேர்தல் ஆணையம், இந்த முறை 151 செலவினப் பார்வையாளர்களை நியமித்துள்ளது. தமிழகத்தில் தேர்தல் நேர்மையாக நடத்தப்பட வேண்டும் என்பதில் தேர்தல் ஆணையம் உறுதியாக உள்ளது.

அதை கருத்தில்கொண்டே மாநில அளவில் தேர்தல் சிறப்பு பார்வையாளராக பிரதாப் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். இவரை பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் தேர்தல் தொடர்பான விவகாரங்கள் குறித்து தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் படி, சென்னை ஆயகர் பவனில், இணைப்புக் கட்டிடம், அறை எண். 412-ல் அவரை சந்திக்கலாம். அவரது அலுவல தொலைபேசி எண். 044 28338378, கைபேசி எண் 7845321461, மின்னஞ்சல் முகவரி splobs.pelecd@tn.gov.in ஆகியவை மூலம் தொடர்புகொள்ளலாம்.

அதேபோல், அவரது தொடர்பு அலுவலர் ஜெகன் மோகனை 9551322999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# கும்பகோணம் அருகே மின்கம்பங்களில் மோதி அரசு பேருந்து விபத்து!



**தஞ்சாவூர், மார்ச்.25:** கும்பகோணம் அருகே திருபுவனத்தில் 2 மின்கம்பங்களில் மோதி அரசு பேருந்து விபத்திற்குள்ளானது. நல்வாய்ப்பாக உயிர் சேதங்கள் ஏற்படவில்லை. ஓட்டுநருக்கு மட்டும் லேசான காயம் ஏற்பட்டது. இந்த சம்பவம் குறித்து திருவிடைமருதூர் காவல் நிலையத்தார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாம்பழம் சின்னத்தை முடக்க கோரும் விவகாரம்: ராமதாஸ் மனு மீது 3 நாட்களில் தீர்ப்பளிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

**புதுடெல்லி, மார்ச்.25:** பாமகவின் மாம்பழம் சின்னத்தை முடக்கக் கோரும் விவகாரத்தில் அந்த கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தாக்கல் செய்யும் மனுவை 3 நாட்களுக்குள் விசாரித்து தீர்ப்பு அளிக்க உரிமையியல் நீதிமன்றத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாமகவுக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்கீடு செய்ததற்கான கடிதத்தை அன்புமணி முகவரிக்கு கடந்த 2025 ஜூலை மாதம் தேர்தல் ஆணையம் அனுப்பியிருந்தது. இந்த கடிதத்தை ரத்து செய்யவும், தேர்தல் ஆணையத்தின் கடிதத்தை தனது முகவரிக்கு அனுப்ப தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரியும் சென்னை உயர் நீதிமன்றத்தில் ராமதாஸ் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை சுட்டிக்காட்டியதுடன், உள்கட்சி பிரச்சினை தீரும் வரை தேர்தலை தள்ளிவைக்க முடியாது என்றும், உரிமையியல் நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகே உயர் நீதிமன்றத்தை நாட முடியும் என்றும் கூறி ராமதாஸ் மனுவை கடந்த பிப்ரவரி 20-ம் தேதி தள்ளுபடி செய்தது.

இந்நிலையில், உயர் நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக ராமதாஸ் தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதி ஜோய்மால்ய பக்சி, வி.எம்.பஞ்சோலி அடங்கிய அமர்வு நேற்று மீண்டும் விசாரித்தது.

ராமதாஸ் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் விகாஸ் சிங் கூறும்போது, "இந்த விவகாரத்தில் ராமதாஸையோ, அன்புமணி ராமதாஸையோ பாமகவின் தலைவராக தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கவில்லை என்பது உயர் நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டு உள்ளது" என்று வாதிட்டார்.


நீதிபதி ஜோய்மால்யா பக்சி கூறும்போது, "அங்கீகரிக்கப்பட்ட கட்சிக்குள் உருவாகும் உள்கட்சி பூசலுக்கு மட்டுமே தேர்தல் ஆணையம் தீர்வு காண முடியும். அங்கீகாரமற்ற கட்சிக்குள் உருவாகியுள்ள கோஷ்டி பூசலுக்கு தீர்வு காண தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை என்பது டெல்லி உயர் நீதிமன்ற உத்தரவில் சுட்டிக் காட்டப்பட்டு உள்ளது" என்று தெரிவித்தார்.

அன்புமணி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் மீனாட்சி அரோரா கூறும்போது, " சின்னம் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை மனுதாரர் திரும்பப் பெற்றுள்ளார். மனுதாரர் ராமதாஸ் தரப்பில் சின்னம் தொடர்பாக எவ்வித தடை உத்தரவையும் பெறவில்லை. உரிமையியல் வழக்கில் உத்தரவு பிறப்பிக்கும் வரை, ஆணையத்தில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின்படியே ஆணையம் நடந்து கொள்ளும்" என்று தெரிவித்தார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது: உரிமையியல் நீதிமன்றத்தில் மனுதாரர் ராமதாஸ் ஏற்கெனவே வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த விவகாரத்தில் உரிய மனுவை உரிமையியல் நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்யலாம். புதிய மனுவை பிப்ரவரி 24-ம் தேதிக்குள் அவர் தாக்கல் செய்யும்போது, அந்த மனு மீது 3 நாட்களுக்குள் விசாரணை நடத்தி தீர்ப்பு அளிக்க வேண்டும். மேல்முறையீட்டு மனு முடித்து வைக்கப்படுகிறது.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# காரைக்குடி அருகே ஈக்களால் ஒரு கிராமமே பாதிப்பு: தேர்தல் புறக்கணிப்பு பேனர் வைத்த மக்கள்




**காரைக்குடி, மார்ச்.25:** காரைக்குடி அருகே ஈக்களால் ஒரு கிராமமே பாதிக்கப்பட்டதால், தேர்தலை புறக்கணிக்கப் போவதாக அப்பகுதி மக்கள் பேனர் வைத்து எதிர்ப்பு தெரிவித்தனர்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே சிறுகப்பட்டி ஊராட்சி குளத்துவேல்பட்டியில் 70 குடும்பங்கள் வசிக்கின்றன. இக்கிராமம் அருகே 2 மாதங்களுக்கு முன்பு தனியார் கோழிப் பண்ணை அமைக்கப்பட்டது.

இந்தப் பண்ணையிலிருந்து ஏராளமான ஈக்கள் ஊருக்குள் பறந்து வருகின்றன. மேலும், அப்பகுதி முழுவதும் துர்நாற்றமும் வீசுகிறது. இதனால், அந்த கிராமமே கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளது.

இதையடுத்து, சுகாதாரமற்ற முறையில் இயங்கும் அந்த கோழிப் பண்ணையை அகற்ற வலியுறுத்தி, அப்பகுதி மக்கள் தொடர்ந்து ஊரக வளர்ச்சி, வருவாய்த்துறை அதிகாரிகளிடம் மனு அளித்தனர். ஆனால், நடவடிக்கை எடுக்கவில்லை.

தனியார் கோழிப் பண்ணையால் மொய்க்கும் ஈக்கள்.

இதனால் அதிருப்தி அடைந்த கிராம மக்கள், வரும் சட்டப்பேரவைத் தேர்தலை புறக்கணிக்கப்போவதாக கிராமத்தில் பேனர் வைத்துள்ளனர். இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறியதாவது: கோழிப் பண்ணையிலிருந்து அதிகளவில் ஈக்கள் வருகின்றன.

அவை உணவுப் பொருட்களில் மொய்க்கின்றன. இதனால், நோய் பரவும் அபாயம் உள்ளது. துர்நாற்றம் கடுமையாக வீசுவதால், சுவாசிக்க முடியவில்லை. பண்ணையை அகற்ற பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே, தேர்தலை புறக்கணிக்க திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# தேர்தலில் பயன்படுத்தப்படும் இவிஎம், விவிபாட் இயந்திரங்கள் கணினி குலுக்கல் முறையில் தொகுதிவாரியாக பிரிப்பு



**சென்னை, மார்ச்.25:** சட்டப்பேரவை தேர்தலில் பயன்படுத்தப்பட உள்ள இவிஎம், விவிபாட் இயந்திரங்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் கணினி குலுக்கல் முறையில் தொகுதி வாரியாக பிரிக்கப்பட்டது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் இடம்பெற்றுள்ள 75,032 வாக்குச்சாவடிகளில் அடிப்படை வசதிகளை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த தேர்தலில் பயன்படுத்த வேண்டிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகள், முதல்கட்ட பரிசோதனைக்குப் பிறகு, அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் கட்டுப்பாட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த தேர்தலில் மொத்தம் இவிஎம்-ல் தலா 90 ஆயிரம் கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் வாக்குப்பதிவு இயந்திரங்கள், 97,500 விவிபாட் கருவிகள் பயன்படுத்தப்பட உள்ளன. இதில் பயன்பாடு போக, பழுதாகும் போது மாற்றுவதற்கான 20 சதவீத இருப்பு வைப்பு இயந்திரங்களும் அடங்கும்.


மாவட்ட அளவில் வைக்கப்பட்டுள்ள இந்த இயந்திரங்களை, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் முன்னிலையில் கணினி குலுக்கல் முறையில் தொகுதி வாரியாக பிரிக்கும் பணி நேற்று நடைபெற்றது.

சென்னையில் மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் முன்னிலையில் இப்பணி நடைபெற்றது. பணிகள் நிறைவடைந்த பின்னர், தொகுதி வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட இவிஎம், விவிபாட் இயந்திரங்களின் பட்டியல்கள், மாவட்ட தலைமையிடங்களில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளுடன் பகிரப்பட்டது.

இந்த இயந்திரங்கள், தேர்தலில் பயன்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு வழங்கப்படும். அவை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அந்தந்த சட்டப்பேரவை தொகுதி காப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்படும். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை இறுதி செய்த பின்னர், அந்த இயந்திரங்கள் பட்டியல் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுடனும் பகிரப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# தமிழகத்தில் ஏப்.1 முதல் அமலாகிறது 60 சுங்கச்சாவடிகளில் 5% வரை கட்டணம் உயர்வு

**சென்னை, மார்ச்.25:** தமிழகத்தில் உள்ள 60 சுங்கச்சாவடிகளில் ஏப்.1 முதல் சுங்கக் கட்டணம் கட்டணம் 3 முதல் 5 சதவீதம் வரை உயர்த்தப்படுகிறது.




தமிழகத்தில் 6,600 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள், அண்டை மாநிலங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றின் வழியாக, தினசரி ஆயிரக்கணக்கான சரக்கு வாகனங்கள், அரசு மற்றும் ஆம்னி பேருந்துகள், பயணிகள் வாகனங்கள் உள்ளிட்டவை பயணித்து வருகின்றன. இச்சாலைகளைப் பயன்படுத்தும் வாகனங்களிடம் கட்டணத்தை வசூலிக்க, 77 இடங்களில் சுங்கச்சாவடிகள் செயல்படுகின்றன.

இவற்றில் சென்னை - கன்னியாகுமரி, திருச்சி - சேலம், சேலம் - கோவை உள்ளிட்ட தேசிய நெடுஞ்சாலைகள் முக்கியமானவையாகும். சுங்கச்சாவடிகளில் ஒவ்வொரு ஆண்டும், 5 சதவீதம் கட்டணத்தை உயர்த்திக்கொள்ள, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அனுமதி அளித்துள்ளது. அதன்படி, ஏப்.1-ம் தேதி முதல் இந்த 60 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்த்தப்பட உள்ளது.

இதில், 60 கி.மீ தொலைவில் வண்டலூர் - மீஞ்சூர் வெளிவட்டச்சாலையில் 4 சுங்கச்சாவடிகள், மதுரை வெளிவட்டச்சாலையில் 2 சுங்கச்சாவடிகள், கிழக்கு கடற்கரை சாலையில் அக்கரை, மாமல்லபுரத்தில் உள்ள நாவலூர் உள்ளிட்ட சுங்கச் சாவடிகளும் அடங்கும்.

தமிழக தேசிய நெடுஞ்சாலைகளில் மீதமுள்ள 17 சுங்கச்சாவடிகளில் ஆண்டு அட்டவணைப்படி செப்.1-ல் கட்டண உயர்வு மாற்றி அமைக்கப்படும்.

போக்குவரத்து அல்லாத வாகனங்கள் 200 முறை பயணம் செய்ய அனுமதிக்கும் வகையில், ரூ.3 ஆயிரம் விலையிலான வருடாந்திர சுங்க அனுமதிச்சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால், வரும் ஆண்டுகளில் சுங்க வசூல் சீரான நிலையை அடையும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈரான் போர் சூழலால் ஏற்கெனவே, வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதுதவிர, ஆட்டோ காஸ் தட்டுப்பாடு, பிரீமியம், பவர், ஸ்பீடு பெட்ரோல் விலை உயர்வு ஆகியவை காரணமாக, அத்தியாவசியப் பொருட்கள், ஓட்டல் உணவுகளின் விலை உயர்ந்துள்ளது. தற்போது சுங்கச்சாவடி கட்டணமும் உயரவுள்ளதால், சரக்கு வாகனங்களின் கட்டணம் அதிகரிப்பதோடு, அத்தியாவசியப் பொருட்களின் விலை மேலும் உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுங்க வருவாய் அதிகரிப்பு: தமிழகத்தில் சுங்கச்சாவடி வாயிலாக 2022-23-ம் நிதியாண்டில் ரூ.3,758.23 கோடியாக வருவாய் இருந்தது. இது, 2023-24-ல் ரூ.4,157.96 கோடியாகவும், 2024-25-ல் ரூ.4,300 கோடியாகவும் அதிகரித்துள்ளது. 2025-26-ம் ஆண்டில் பிப்.28 வரை, ரூ.4,000 கோடியாக உள்ளது.

# உயர் ரத்த அழுத்தம், காய்ச்சல், சளி பிரச்சினைகளுக்கான 198 மருந்துகள் தரமற்றவை: மருந்து தரக்கட்டுப்பாட்டு வாரிய ஆய்வில் உறுதி

**சென்னை, மார்ச்.25:** உயர் ரத்த அழுத்தம், காய்ச்சல், சளி பிரச்சினைகளுக்கான 198 மருந்துகள் தரமற்றவையாகவும், போலியாகவும் இருந்தது, மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம் ஆய்வில் தெரியவந்துள்ளது.

நாடு முழுவதும் விற்பனை செய்யப்படும் அனைத்து மாத்திரை, மருந்துகளையும் மத்திய, மாநில மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியங்கள் மூலம் ஆய்வு செய்யப்படுகின்றன.

அப்போது, தரமற்ற, போலி மருந்துகள் கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட உற்பத்தி நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதன்படி, கடந்த மாதத்தில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்து மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

அதில், உயர் ரத்த அழுத்தம், காய்ச்சல், சளி, கிருமி தொற்று, அஜீரண பிரச்சினைகள் உள்ளிட்ட பாதிப்புகளுக்கு பயன்படுத்தப்படும் 198 மருந்துகள் தரமற்றவையாகவும், 4 மருந்துகள் போலியானதாகவும் இருந்தது கண்டறியப்பட்டது.

அந்த விவரங்கள், பொது மக்களின் விழிப்புணர்வுக்காக மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியத்தின் https://cdsco.gov.in/ என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட உற்பத்தி நிறுவனங்களிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. அதன் பின்னர், அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்க மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம் முடிவு செய்துள்ளது.




# குற்றவாளிகளை காப்பாற்ற முயன்ற இபிஎஸ் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்: அமைச்சர் ரகுபதி வலியுறுத்தல்

**சென்னை, மார்ச்.25:** ஜெயராஜ் - பென்னிக்ஸ் கொலை வழக்கில் பொய் சொல்லி குற்றவாளிகளை காப்பாற்ற முயன்ற பழனிசாமி, பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: சாத்தான்குளம் தந்தை ஜெயராஜ் - மகன் பென்னிக்ஸ் கொலை வழக்கில் 9 போலீஸாரும் குற்றவாளிகள் என 6 ஆண்டுகளுக்கு பிறகு மதுரை கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது.

சாத்தான்குளம் சம்பவத்தை இரட்டை படுகொலை என்று விமர்சித்த அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின், காவல்துறையினர் மீது கொலை வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று தொடர் அழுத்தம் கொடுத்தார்.

பென்னிக்ஸ் குடும்பத்தினருக்கு திமுக சார்பில் ரூ. 25 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. இத்தனைக்கும் ஜெயராஜ், பென்னிக்ஸ் குற்றவாளிகள் அல்ல. கரோனா ஊரடங்கு நேரத்தில் விதியை மீறி கடையை திறந்து வைத்திருந்தார்கள் என்பதுதான் அவர்கள் மீதான காவல் துறையின் குற்றச்சாட்டு.

மூச்சுக்கு முந்நூறு தடவை, கரோனா காலத்திலும் சிறப்பான ஆட்சியை கொடுத்தோம் என சொல்லும் பழனிசாமி, அந்த கரோனா காலத்தில்தான் ஜெயராஜ், பென்னிக்ஸ் உயிர்கள் அநியாயமாக பறிக்கப்பட்டன.

கரோனா காலத்தில் பழனிசாமியின் சிறப்பான ஆட்சிக்கு சாத்தான்குளமே சாட்சி. காவல்துறையினரால் பிடித்துச் செல்லப்பட்ட இருவரும், காவல் நிலைய விசாரணைக்கு பிறகு சிறையில் அடைக்கப்பட்டனர்.

ஆனால், சில மணி நேரத்தில் இருவருமே அடுத்தடுத்து இறந்து போக, மூச்சுத்திணறல், உடல்நல குறைவு என்று வழக்கமான காரணத்தை சொல்லி கதையை முடிக்க பார்த்தது அன்றைக்கு ஆட்சியில் இருந்த பழனிசாமி அரசு. முதல்வரே பொய் சொல்லி காவல் துறையினரை காப்பாற்றினார்.

பாதிக்கப்பட்ட ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இரண்டு அப்பாவிகளை நோயாளி ஆக்கிய மனசாட்சி இல்லாத மனிதர்தான் பழனிசாமி. சாத்தான்குளம் கொடூர கொலை சம்பவத்தில் இன்றைக்கு நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது.

அதிமுக ஆட்சியில் மூடி மறைக்க நினைத்த வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பளித்ததன் மூலம் மூச்சுத்திணறல், உடல்நல குறைவால்தான் உயிரிழந்தனர் என பழனிசாமி சொன்ன பொய்யை வெட்ட வெளிச்சமாக்கி விட்டது.

குற்றவாளிகளை காப்பாற்ற அன்று பொய் சொன்ன பழனிசாமியும், ஒருவகையில் குற்றவாளிதான். பொய் சொல்லி குற்றவாளிகளை காப்பாற்ற முயன்ற பழனிசாமி பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# 'எல்லா கட்சிகளும் சூலாயுதம்.. நான் வேலாயுதம்' - திருத்தணி முருகனை வழிபட்டு சீமான் பிரச்சாரம்



**சென்னை, மார்ச்.25:** தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரத்தை நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று திருத்தணியில் முருகனை வழிபட்டு தொடங்கினார். மற்ற எல்லா கட்சிகளும் எங்களுக்கு எதிர்ப்பக்கம் சூலாயுதமாக உள்ளனர். நான் வேலாயுதமாக இருக்கிறேன் என்று அவர் கூறினார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்து, நாதக தனித்துப் போட்டியிடுகிறது. தேர்தல் பிரச்சாரத்தை நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் திருத்தணியில் நேற்று தொடங்கினார். திருத்தணி முருகன் கோவிலுக்கு நேற்று காலை வந்த சீமான், மலை அடிவாரத்தில் வேலுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து, அலங்கரிக்கப்பட்ட வேலுடன் மலையேறி முருகனை வழிபட்டார். இதையடுத்து திருத்தணி நகர் பகுதியில் கமலா திரையரங்கம் அருகே வேட்பாளர் சந்திரனுடன் பரப்புரையை சீமான் தொடங்கினார்.

முன்னதாக கோயில் வளாகத்தில் செய்தியாளர்களிடம் சீமான் கூறியதாவது: முருகன் என் இனத்தின் இறைவன், முருகனை நம்பினோர் அஞ்சுவதற்கு இல்லை, அவரை நம்பி இந்த போர்க்களத்துக்கு செல்கிறோம். மற்றவர்களுக்கு இது தேர்தல் எங்களுக்கு இது போர், அதனால் முருகனிடம் சொல்லிவிட்டு செல்கிறோம். 2026 தேர்தல் நல்ல ஆட்சியை நோக்கி இருக்கும். உலகமே திரும்பி பார்க்கும் நல்ல ஆட்சியை கொடுப்போம். உலகத்தின் தலைசிறந்த நாடாக பூமியின் சொர்க்கமாக இந்த நாட்டை மாற்றுவேன்.

அனைத்து கட்சிக்கும் ஒரே எதிர்க்கட்சி நாங்கள் தான், ஊழல் இல்லாத, இலவசம் தராத, வாக்கு காசு கொடுக்காத ஒரு கட்சியை சொல்லுங்கள். எல்லோரும் ஒரு பக்கம் உள்ளனர், நான் எதிர்பக்கத்தில் உள்ளேன். அவர்கள் சூலாயுதமாக உள்ளனர், நான் வேலாயுதமாக இருக்கிறேன். இலவசம் என்பது ஏமாற்று வேலை, எதையாவது கொடுத்து மக்களை ஏமாற்ற நினைக்கின்றனர், அதிலிருந்து நான் மாற்ற நினைக்கிறேன். இவை இரண்டுக்கும் நடுவில் தான் போட்டி. இது நீண்டகாலமாக, 500 ஆண்டுகளாக நடக்கும் போர் என்பதால் முன்கூட்டியே பணிகளை தொடங்கியுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

வேலோடு நீ வாடா முருகா!

சீமான் தனது பிரச்சாரத்தை 'வேலோடு நீ வாடா முருகா' என்ற பாடலைப் பாடித் தொடங்கினார். 'திருத்தணி முருகா இங்கு அனைத்தையும் திருத்த நீ அருள்வாய் முருகா' என்று வரியை பாடியபோது, கூட்டத்தினர் ஆரவாரம் செய்தனர்.

இதைதொடர்ந்து அவர் பேசுகையில், "ஆசிரியர்கள் முதல் தூய்மை பணியாளார்கள் வரை போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். உலகில் அனைத்து தொழில் செய்பவனும் அவன் தயாரிக்கும் பொருளுக்கு அவனே விலை நிர்ணயிக்கிறான், ஆனால் விவசாயி உற்பத்தி செய்யும் பொருளுக்கு, வாங்குபவன் தான் விலையை நிர்ணயிக்கிறான். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த நிலையை மாற்றுவோம்" என்றார்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM